உ
ஓம்
பரப்பிரஹ்மணேநமஃ

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(*ALL RIGHTS RESERVED.*)


| | | |
|---|---|---|
| தொகுதி 12 | அக்ஷயஞு மார்கழிமீ கஉ<br>1926ஞு டிசம்பர்மீ 16உ | பகுதி 6 |


## கடவுள் வணக்கம்.

தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன
செயற்கொண் டிருப்பனமுதற்
றேகங்க ளத்தனையு மோகங்கொள் பௌதிகஞ்
சென்மித்த வாங்கிறக்கும்
விரிவாய பூதங்க ளொன்றோடொன் றுயழியு
மேற்கொண்ட சேடமதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்ய முபசாந்த
வேதவே தாந்தஞானம்
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருளருட்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமை யென்றைக்கு மிறவாமை யாய்வந்து
பேசாமை யாகுமெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக காலமலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே. (1)

அரசேநின் றிருக்கருணை யல்லா தொன்றை
யறியாத சிறியேனு னதனுன் முத்திக்
கரைசேரும் படிக்குனருட் புணையைக் கூட்டுங்
கைப்பிடியே கடைப்பிடியாக் கருத்துட் கண்டேன். (2)

கண்டேனிங் கென்னையுமென் றனையு நீங்காக்
கருணையுநின் றன்னையுநான் கண்டேன் கண்டேன்
விண்டேனென் றெனைப்புறம்பாத் தள்ள வேண்டாம்
விண்டதுநின் னருட்களிப்பின் வியப்பா லன்றோ. (3)

# அரும்பொருள் விளக்கம்.

1\. பஞ்சபூதங்களின் சம்பந்தம் பெற்றவை பௌதிகம் எனப்படும். அவை எண்பத்துநான்கு லக்ஷ யோனி பேதங்களாக விரிந்திருக்கின்றன. அவற்றுள், ஊர்வன (தவழ்பவை) பதினொன்றுலட்சம்; மக்கள் ஒன்பது லட்சம்; நீரில் வாழ்பவையும், பறப்பவையும், மிருகங்களாயுள்ளவையும் பப்பத்துலட்சம்; தேவர் பதினான்குலட்சம்; தாவரம் இருபதுலட்சம். இந்த எண்பத்து நான்கு லட்ச பேதங்களும், அண்டசம் (முட்டையிற் பிறப்பவை), சுவேதசம் (வேர்வையிலுதிப்பவை), உற்பீசம் (நிலத்திற் பிறப்பவை), சராயுசம் (கருவிற் றோன்றுவன) என நால்வகைத் தோற்றங்களாகவும், தேவர், மனிதர், மிருகம், பட்சி, ஊர்வன, நீர்வாழ்வன, விருட்சமாவன என எழுவகைப் பிறப்புக்களாக வும் நிற்கும். வினையடியாகத் தேகம்பெற்றுவரும் இவை முதலியவெல்லாம் எவ்வாறு பிறந்தனவோ அவ்வாறே இறக்கும். இவற்றிற்கு ஆதாரமான மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும், ஆகாயத்திலே காற்றும், காற்றிலே நெருப்பும், நெருப்பிலே நீரும், நீரிலே மண்ணும் ஆக, ஒன்றிலே யொன்றாகத் தோன்றி, அங்ஙனமே யொடுங்குமெனக்கொள்ளாது, சத்தத்திலே ஆகாயமும், பரிசத்திலே வாயுவும், உருவத்திலே தேயுவும், இரசத்திலே அப்பு வும், கந்தத்திலே பிருதிவியுமாகத் தன்மாத்திரை ஐந்தில் பூதங்களைந்தும் தோன்றி யொடுங்குமெனக் கொள்க.

மேற்சொன்ன பிருதிவி முதலிய தத்துவ சமூகங்களெல்லாம் இறைவ னுக்கு ஸ்தூல சரீரமும், ஆன்மா சூட்சும சரீரமும், சத்தி அதிசூட்சும சரீரமு மாம் (ஆகாயம்-சரீரம்). இக்கருத்தே இறைவனை 'வெறுவெளி' எனக் குறிக் கும்.

நிராலம்பம்=ஆதாரம் வேண்டாதது. அதாவது,

இறைவன் உலகத்துடன் வேற்றுமையில்லாது கலந்து யாவற்றிற்கும் ஆதாரமாக இருந்தும், பொருள் தன்மையில் வேறுபட்டு ஒன்றின் ஆதாரத் தையும் வேண்டாதிருத்தல்.

நிறைசூன்யம்=பிரகிருதி, அசுத்தமாயை, சுத்தமாயை, என்னும் முப்பாழை யும் கடந்து நின்ற இடம்.

உபசாந்த வேதவேதாந்த ஞானம்=விருப்பு வெறுப்பு இல்லாமையைப் போதிக் கின்ற உபநிடதங்களின் முடிவில் விளங்கும் ஞானம்.

பிரியாத பேரொளி பிறக்கின்ற அருள்=நீங்காத பெருஞ் சோதியில் உண்டா கும் அருள்.

பரிபாகம்=பரிபக்குவம்.

2. புணை=மரக்கலம்.
கடைப்பிடி=கருமம் முடிக்குந் துணிவு.

3. விண்டேன்=கண்டவுண்மையை வெளியிட்டேன்.
புறம்பு=வெளி.


# ஆனந்தபோதினி

அக்ஷய ௵ மார்கழி ௴ ௧௨


## நகர ஏழைகளின் பரிதாபநிலை.

நம் தேசத்தில், நாடுகளில் வாசஞ்செய்வோர், நகரங்களில் வாசஞ்செய்வோர் ஆகிய எல்லோரினுமே பெரும்பான்மையோருக்கு இக்காலத்தில் வருமானக் குறைவாலும், வரியிறைத் தொல்லையாலும், வேறுபல வம்புகளாலும், ஏமாற்றங்களாலும் பொதுவாகச் சகிக்கமுடியாத ஜீவனக்கஷ்டம் ஏற்பட்டிருப்பினும், நகரவாசிகளின் துன்பம் அளவிடக்கூடாததா யிருக்கிறது. 'கெட்டால் பட்டணஞ் சேர்' என்ற முதுமொழியைப் பின்பற்றிக் கிராமங்களிலுள்ளவர்களிற் பலரும் பிழைப்புக்குவழியின்றிப் 'பட்டணம் போனால் கஷ்டமின்றிப் பிழைக்கலாம்' என்று துணிந்து எப்பொழுதும் நகரங்களில்வந்து குடியேறித் தங்கள் தங்களாலியன்ற தொழில்களைச் செய்து ஜீவித்துவருகின்றனர். இப்பேர்ப்பட்டவர்களின் தொகை நாடோறும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

இங்ஙனம் அதிகரித்து நெருங்குவோர், தாங்கள் நினைத்தபடி சௌக்கியத்தை அடையவில்லை. சகிக்கமுடியாத துன்பங்களில் சிக்கிக்கொண்டு 'ஏன் இங்கேவந்தோம்!' என்று விழிக்கிறார்கள். ஓடிப்போகலாமென்று நினைத்தாலும், அவர்கள் பட்ட கடன் தொல்லை முதலிய வஜ்ஜிரப் பசைகள் அவர்களைப் பற்றிப் பிடித்திழுத்துக்கொண்டிருக்கின்றன. அவர்கள், ஆற்றில் மிதந்துசென்ற கரடியைக் கம்பளி மூட்டையென்று நினைத்து ஆவலோடு நீந்திச்சென்று அதைப்பற்றிய ஒருவன் அதன் கைப்பிடியில் அகப்பட்டுக்கொண்டு, தான் விட்டாலும் அது விடாததால் சஞ்சலப்பட்டதைப்போல்,

தாங்கள் ஓடிவிட நினைத்தும் பட்டணம் தங்களை விடாததால் படாத பாடும் படுகின்றனர்.

இத்தகைய மனிதர்களில், ஐம்பது ரூபா சம்பாதிப்பவர்களுக்கும் சௌகரியம் சிறிதுமில்லை. அவர்கள், மாதம் பிறந்ததும் வீட்டு வாடகைக்குப் பத்தோ பதினைந்தோ எடுத்துவைத்துவிடவேண்டும்; குறைந்தது மூன்றுவாராகனுக்காவது அரிசிவாங்கவேண்டும். உப்பு, புளி, மிளகாய் முதலியவற்றிற்கு நான்கு ரூபாய் செலுத்தவேண்டும்; காய்கறிகளுக்கு ஏழரை, எண்ணெய்க்கு இரண்டு, பால்காரனுக்கு இரண்டு, கொல்லைக்காரி, முறைவாசல்காரி இவர்களுக்கொன்று சமர்ப்பிக்கவேண்டும்; இவற்றிற்குமேல் வருவார் போவார் செலவு, துணிச்செலவு, பலகாரச்செலவு, வெற்றிலைபாக்கு பொடிச்செலவு ஆகியவற்றிற்கும் ரூபாய்வேண்டும். இவர்கள் எவ்வளவுதான் சிக்கனமாகச்செலவுசெய்தாலும்,வரும்படிக்குமேல் மாதந்தோறும் பத்தோ பதினைந்தோ கடன்பட்டுக் குடும்பத்தை நடத்தவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதனால் கடன்தொல்லை எப்பொழுதும் இவர்களை விட்டு நீங்குவதில்லை. ஐம்பது ரூபா சம்பாதிப்பவர்களின் கதியே இவ்வாறிருக்கும்போது பத்துப் பதினைந்து சம்பாதிப்பவர்களின் நிலைமை எவ்வாறிருக்குமென்பதை நாம் கூறவேண்டியதில்லை. அவர்கள் கண் கலங்கி நிற்கும் நிலைமையை நினைக்குந்தோறும் உண்மையான தேச பக்தர்களின் கண்கள் கலங்காமலிரா.

இத்தகைய துன்பங்களுக்குக் காரணமென்ன? முதன்மையாக, தாங்கமுடியாத—நியாயமற்ற வீட்டுக் குடிக்கூலியும், உணவுப்பொருள்களின் அளவுக்குமிஞ்சிய விலையேற்றமுமே தக்க காரணங்களாம். பதினைந்து வருடங்களுக்குமுன் இரண்டு ரூபாய் வாடகை கொடுத்த ஒரு சிறு அறைக்கு இப்பொழுது ஏழு ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதனால் சொற்ப சம்பளக்காரர்கள் தங்கள் சக்திக்கேற்றவாறு இரண்டரை ரூபாய்க்கோ, மூன்று ரூபாய்க்கோ வீடு கிடைக்காமல் அல்லற்படுகின்றனர். எங்கோ மூலை முடுக்குகளில் "ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என்றபடி யமைந்த சிறு சிறு இடங்களைப் பெற்று அவற்றில் வாட்டத்தோடு வாசஞ்செய்கின்றனர்; மழைகாலங்களில் இவர்கள் படும் துன்பம் கடவுளுக்குத்தான் தெரியும்; தெருவில் செல்லுந் தண்ணீர் நடுவீடுவரை யேறி எங்கும் ஜலமயமாக அந்த நீர்மயமான இடங்களிலேயே நீர்வாழ் ஜந்துக்களைப்போல தங்கிக் காலந்தள்ளு

கின்றனர். இத்தகைய தாழ்ந்த இடங்களுக்கும் ஏற்பட்ட வாடகையும் அதிகமாயிருப்பதால் அதையும் கொடுக்கமுடியாமல் இந்த ஏழைகள் கடனுக்குள்ளாகிக் கலங்குகின்றனர். ஜாஸ்தி சம்பளமுடையோரும் தங்கள் வருமானத்தில் மூன்றிலொருபங்கு வாடகைக்குச் செலுத்திவிட்டுக் கடனும்பட்டு வாசஞ்செய்யத்தக்க இடமும் பெறுமல் இடுக்கணுற்றுத் துடிக்கிறார்கள்.

உணவுப் பொருள்களில், சில வருடங்களுக்குமுன், ரூபாய் ஒன்றுக்கு ஆறு படி விற்ற அரிசி, இப்பொழுது இரண்டேமுக்கால் படி விற்கிறது. வாயில் வைத்தவுடன் வாந்தியெடுக்கத்தக்க நாற்றமெடுத்த அரிசி மூன்றுபடி மூன்றரைப்படி விற்கிறது. ஏழைகள் கொஞ்சம் சகாயமா யிருப்பதைக் கருதி இந்தத் துர்நாற்ற அரிசியையே வாங்கிச் சமைத்துண்டு நோய்கொண்டு துன்புறுகின்றனர்; அதனோடு அதிகச் செலவால் கடன்பட்டும் கவலையடைகிறார்கள். கொஞ்சம் அதிக வரும்படியுள்ளவர்கள் படிகுறைவான அரிசியை வாங்கி அதிகப் பணம் செலவிட்டு மிடிக்குள்ளாகின்றனர். மற்ற பொருள்களும் ஒன்றுக்குப் பத்தாகவே விலையேறியிருக்கின்றன. கால், அரை செலவு செய்வோரும் மனதிற்குத் திருப்தியான பதார்த்தங்களை வாங்கி உபயோகப்படுத்த முடிவதில்லை. கொஞ்சம் ஜாஸ்தி சம்பளமுடையவரும் திருப்தியான ஆகாரமுண்ண ஏதுவில்லை. ஏழைகள், அரைவயிறு, கால்வயிறு பற்றுத ஆகாரமுண்டும், கஞ்சியும் கூழும் காய்ச்சிக் குடித்தும் கண் கலங்கி ஏங்குகின்றனர். சில கூலி ஜனங்கள், வாடகைகொடுத்துச் சிறு குடிசைகளிலேனும் குடியிருக்க முடியாமல் மாத்தடிகளிலும், சமுத்திரக்கரையிலும், பெரிய ஹவுஸ்களின் திறவையான விராண்டாக்களிலும், சாக்கடைமேற் பரப்பப்பட்ட கற்களின்மீதும் குடியிருந்து மழையிலும், பனியிலும் மனத்துயர்கொண்டு காலங்கழிக்கின்றனர். உத்தியோகத்திலும், வேறு தொழில்களிலுமிருக்கும் அநேகர் அதிகக் குடிக்கூலி முதலிய தொல்லைகளைச் சகிக்கமுடியாமல், பத்துமைல், இருபதுமைல் தூரங்களிலுள்ள ஊர்களில்போய்க் குடியிருந்து தினந்தோறும் ரெயிலிலும், பஸ்ஸிலும் நகரத்திற்கு வந்து தங்கள் தொழில்களைப் பார்த்துச் செல்கின்றனர். இத்தகைய அல்லல்கள் சென்னை முதலிய நகரங்களிலேயே மிகுதியும் உண்டாகின்றன.

இந்நிலையில், கஷ்டப்படுவோர், சொந்தவீடுவைத்து வாடகை

வசூலிக்கும் தனவந்தர்களிடத்தில், "குடிக்கூலியை ஏன் இவ்வாறு அதிகப்படுத்தி ஏழைகளை வருத்துகிறீர்கள்?" என்று கேட்டால், அவர்கள், "நாங்களென்னசெய்வோம்; வீட்டுவரி அதிகம்; ரிப்பேர்ச் செலவு அதிகம்; அவற்றையெல்லாம் குடிக்கூலியிலிருந்துதானே சரிப்படுத்தவேண்டும்" என்கிறார்கள். நடு நிலைமையில் நின்று இதைப்பற்றி ஆராய்ந்தால் இதன் உண்மை இன்னதென்று புலப்படும். வீட்டுக்காரர்கள், தங்களுக்கும் மிகுந்த கஷ்டமிருப்பதாக, வருந்தி வரியைக் குறைப்பதற்கான மார்க்கங்களைத் தேடி, மீட்டிங்குகளில் வீட்டுவரி மிகுதியைப்பற்றிப் பலர் பேசும்படி செய்து கொஞ்சம் கொஞ்சம் வரிகளைக் குறைத்துக்கொண் டிருக்கிறார்கள். சில இடங்களில் வரி குறைக்கப்படாவிடினும், சில இடங்களில் சிறிது குறைக்கப்பட்டிருக்கின்றது. அப்படிக் குறைக்கப்பட்டவர்களுக்கும், குடிக்கூலிக்காருக்குச் சிறிதேனும் வாடகை குறைக்க மனமிசையவில்லை. தவளையைக் கௌவிய பாம்பு எக்காரணத்தாலும் அதைவிட மனமிசையாததுபோல, எவ்வளவு அனுகூலமுண்டானாலும் குடிக்கூலியை மாத்திரம் குறைக்க மனமிசையாமல் மேலும் மேலும் ஏற்றுவதற்கே உபாயந் தேடுகிறார்கள். முன்சிபல் கௌன்ஸிலில் மெம்பராயிருக்கும் சில பெரியாரும், வீட்டுவரிகளைச் சிறிது சிறிது குறைக்கும் மார்க்கத்தைச் செய்திருப்பதாகப் பொது ஜனங்களிடத்தில் தங்கள் உபகாரகுணத்தைவெளியிட்டு முகமலர்ச்சி காட்டுகிறார்கள். அவர்கள் செய்திருக்கும் சிறிய அனுகூலமும் வீட்டுக்காருக்கே அன்றி அதிக வாடகை கொடுக்கும் ஏழை ஜனங்களுக்கல்ல.

உணவுப்பொருள்களும், அவை அதிகமாக உற்பத்தியாகுங் காலத்திலுங்கூட, ஒருகாலத்தில் ஏறின விலை இறங்காமலே விற்கப்படுகின்றன. இதற்குக் காரணங் கேட்டால், சிலர், "இப்போது ஜனசங்கை அதிகமாகி வருகிறது; அதனால் இனி உணவுப்பொருள்களின் விலை குறையமாட்டாது" என்று கூறுகிறார்கள். சிலர், "இப்போது பணவிருத்தி அதிகம்; எவருக்கும் பணத்தைப்பற்றிய கஷ்டமில்லை; எல்லோரும் எதற்கும் அதிகப்பணம் கொடுக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்களா யிருக்கிறார்கள்; அதனாலேயே உணவுப்பொருள்களின் விலை அதிகமாயிருக்கின்றது; வீட்டுவாடகை முதலியனவும் மிகைப்பட்டிருக்கின்றன; இனி இவை எப்பொழுதும் இப்படியே இருக்குமேயன்றிக் குறையமாட்டா" என்று கூறுகின்றார்கள். சிலர், "மேல்நாட்டாரின் போக்கைத் தழுவி நம் நாட்டினர் நடை

யுடை பாவனைகளில் அதிகச்செலவு செய்கிறார்கள்; குடி முதலிய துர்ப்பழக்கங்களில் அதிகச் செலவு செய்கிறார்கள்; இவைகளே மனிதரின் உபயோகப்பொருள்களின் விலையேற்றத்திற்குக் காரண" மென்கிறார்கள்.

எது எக்காரணத்தால் உண்டாயிருப்பினு மிருக்கட்டும். வீட்டு வாடகையாலும்,உணவுப்பொருள்கள் முதலியவற்றின் விலையேற்றத்தாலும் நகரவாசிகளுக்கு மேற்கூறியபடி கஷ்டமுண்டாகியிருப்பது உண்மை. இக்கஷ்டத்தின் காரணங்களைக் கண்டுபிடித்து இயன்றவரையில் நீக்கிப் பொதுஜனங்களுக்குக் கூடியவரையில் சௌகரியத்தை உண்டாக்குவது தேசபக்தர்களாகிய பெரியாரின் கடமையாம்.

சமீபகாலத்தில் நடந்த தேர்தலில், பொது ஜனங்கள், தங்களுக்கு நலம்புரிவாராகக் கருதப்பட்டவரெவரோ அவருக்கே அதிகமாக வாக்களிக்க, அவர்களே வெற்றிபெற்றிருக்கிறார்கள். அவர்களே இத்தகைய காரியங்களைக் கவனித்தற்கு மிகவும் உரிமைபூண்டவர்களாவார்கள். ஜனங்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்தது, தங்கள் நலங் கருதியே. ஆதலின், இவர்கள், நகரங்களில் ஏற்பட்டிருக்கும் இத்தகைய கஷ்டங்களையும், நாடுகளில் ஏற்பட்டுள்ள வேறு பல இன்னல்களையும் கூடியவரை நீக்க முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டும். நமக்குள்ளேயே பிரிவினைகளை ஏற்படுத்துவதை விடுத்து ஒற்றுமை பெற்றுப் பொதுவாக தேசநலத்தை நாடவேண்டும்.

ஓம் தத் ஸத்.

## தேசநலப்பகுதி.

### லோகமான்ய பாலகங்காதர திலகர்.

(202-ம் பக்கத் தொடர்ச்சி.)

### அவரது மூன்றாவது சிறைவாசம்.

கூராத் பிரிவினை ஏற்பட்டதிலிருந்து அரசாங்கத்தார் லோகமான்ய திலகரின்மேல் வெறுப்படைந்தவர்களாய் அவர்மீது தங்கள் கவனத்தைச் செலுத்திவந்தனர். லார்டு கர்சன்துரை மகனார் வங்காளத்தை இரண்டு பிரிவாகப் பிரித்துவிட்டுச் சென்றது இந்தியர்களுக்குள் ஆத்திரத்தையும், மனக்கொதிப்பையும் உண்டுபண்ணிவிட்டது. அதன்பயனாக வங்காளத்தில் பல இடங்களில் சில்லறைச் சச்சரவுகளும், குழப்பமும் ஏற்பட்டன. அரசாங்கத்

தார், பலரைத் தங்களது அடக்குமுறைச் சட்டங்களினால் அடக்க ஆரம்பித்தார்கள். அதனால் இந்தியா முழுவதும் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டது. 1908-ம் வருஷத்தில் முசவர்ப்பூர் என்ற இடத்தில் இரண்டு ஐரோப்பியப் பெண்மணிகள் "பாம்" என்ற வெடிகுண்டினால் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் அரசாங்கத்தாருக்கு மிகுந்த பீதியையும், அச்சத்தையும் உண்டுபண்ணிவிட்டது. அப்பொழுது இந்தியாவில் நடைபெற்றுவந்த ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளெல்லாம் அடக்குமுறையைக் கையாளும்படி அரசாங்கத்தினரை வற்புறுத்தி எழுதிவந்தன. இந்தியப் பத்திரிகைகளெல்லாம் அடக்குமுறை கூடாதென்று கண்டித்தெழுதிவந்தன. ஆனால் அரசாங்கத்தார் வங்காளத் தலைவர்களில் பலரைக் கைதிசெய்தும், நாடு கடத்தியும் வந்தனர். அச்சமயத்தில் லோகமான்ய பாலகங்காதர திலகர் அரசாங்கத்தினரின் அடக்குமுறையைப் பலமாகக் கண்டித்துத் தமது பத்திரிகைகளில் எழுதிவந்தார். அப்படி இவர் எழுதிவந்தது அதிகாரவர்க்கத்தினருக்குப் பிடிக்கவில்லை. 1908-ம் வருஷத்தில் பம்பாயில் அரசாங்கத்தார் லோகமான்ய பாலகங்காதர திலகரைக் கைதி செய்தனர். அப்பொழுது திலகர் பம்பாய்ச் சட்டசபையில் ஓர் அங்கத்தினராக இருந்தார். அரசாங்கத்தார் அவரைக் கைதிசெய்ததுடன் நில்லாமல் பூனா நகரிலுள்ள அவரது வீட்டையும், "கேஸரி" "மராட்டா" பத்திரிகைகளின் கார்யாலயங்களையும் சோதனை செய்தனர். இராஜத்துவேஷமான விஷயங்களைப் பத்திரிகைகளில் எழுதியதாக அரசாங்கத்தார் திலகரின்மீது இராஜத்துவேஷ வழக்குத் தொடுத்தனர். நீதிபதி அவரை ஜாமீனில் விட மறுத்துவிட்டார். அவரது வழக்கு 1908-ம் வருஷம் ஜூலை மாதம் 12-ந் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு தொடர்ச்சியாக எட்டு நாட்கள்வரையில் நடந்தது. லோகமான்ய திலகர் தமது கட்சியை எடுத்துக் கோர்ட்டில் வாதித்துத் தமது வழக்கை நடத்தினார்; 8 நாட்கள் வரையில் லோகமான்யர் தமது கட்சியைப்பற்றி விடாமல் வாதித்தார். சட்ட ஞானத்தில் சிறந்து விளங்கிய அவரது வாதத்தைக் கேட்டு, கோர்ட்டிலிருந்த நீதிபதிகள் திகைத்துப்போயினர். கடைசிவரையில் தாம் குற்றவாளி அல்ல என்பதை லோகமான்யர் நீதிபதிகளுக்கு நன்கு விளக்கிக் காட்டினார். ஆனால் ஜூரிகளில் ஏழுபேர் ஐரோப்பியர்கள், இருவர் பார்ஸிகள். நீதிபதி அவர் வழக்கின் சாராம்சத்தைத் தொகுத்து ஜூரிகளுக்கு எடுத்துச் சொன்னார். அந்த ஏழு ஐரோப்பிய ஜூரிகளும் திலகர் குற்றவாளிதான் என்று கூறினார்கள். இரண்டு பார்ஸி ஜூரிகளும் அவர் குற்றவாளியல்ல என்று கூறினர். ஏழு ஐரோப்பிய ஜூரிகளின் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு நீதிபதி திலகருக்கு ஆறு வருடம் தீபாந்தர சிட்சையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

தீர்ப்புச் சொன்ன அன்றிரவு பம்பாயில் உண்டான குழப்பத்திற்கு அளவேயில்லை. மறுநாள் கடைகளெல்லாம் மூடப்பட்டன. தொழிற்சாலைகளில் வேலைசெய்துவந்த தொழிலாளர்கள் எல்லோரும் வேலைநிறுத்தஞ் செய்தனர். எங்கும் ஜனங்களுக்குள் கலகமும் கலக்கமும் ஏற்பட்டன. உடனே அரசாங்

கத்தார் திலகரை பர்மாவிலுள்ள மாண்டலே என்ற இடத்தில் கொண்டு போய்க் காவலில் வைத்தனர்.

திலகர் சந்தோஷமாக அந்தத் தண்டனையை ஏற்று அனுபவித்தார். சிறையிலிருந்துவந்தகாலத்தில் அவர் பகவத்கீதையை ஆராய்ச்சி செய்துவந்தார். சிறையிலிருந்து வெளிவந்ததும் அவர் தமது ஆராய்ச்சியை "கீதாரஹஸ்யம்" என்ற பெயருடன் ஒரு நூலாக வெளியிட்டார். அந்த நூலின் பெருமையைப்பற்றிப் புகழாதார் இல்லை. அப்புஸ்தகத்தின் பிரதிகள் ஒரு வாரத்தில் அனேக ஆயிரம் செலவாயின.

1914-ம் வருஷம் அவர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். சிறையிலிருந்து விடுதலை யடைந்ததும் அவர் மறுபடியும் தீவிரமாகத் தேசிய வேலைகளைச் செய்துவந்தார். பிறகு ஐரோப்பிய மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. லோகமான்ய திலகர் நாட்டில் தமது கட்சியைப் பலப்படுத்தினர். யுத்தம் ஆரம்பமானதும் அவர் சுய ஆட்சிக் கிளர்ச்சியை ஆரம்பித்து இந்தியா சுய ராஜ்யத்தை அடையவேண்டுமென்று பெரிதும் உழைத்துவந்தார். அக்காலத்தில் லோகமான்யரின் முயற்சியினுல் இந்தியா முழுவதும் சுய ஆட்சிக்கிளர்ச்சி பரவியது. நாட்டுமக்கள் தங்களது உண்மை நிலையை அறிந்துவிட்டனர். இப்படியே லோகமான்யர் தேசசேவை செய்வதிலேயே தமது வாழ்நாள் முழுவதையும் செலவழித்துப் பலவித கஷ்டங்களை அனுபவித்தார். கடைசியில் அவரது தேகம் அசௌக்கியம் அடைந்தது. அவர் 1920-ம் வருஷம் ஆகஸ்ட்டுமாதம் முதல்தேதியன்று ஆண்டவன் திருவடிநிழலையடைந்தார். அவரது ஆத்மா, சாந்தி அடைக. இப்பெரியாரின் சிறந்த வழிகளைத் தமிழ்மக்கள் பின்பற்றுவார்களாக.

திரு. கே. சு.

---

## இந்தியரின் ஆயுள் விருத்தியும் உபவாசமும்.

நம் பாரத நாடு இயற்கையி னிருப்பிடமாகும். சாஸ்திரங்களின் பெருமையும் நம் நாட்டிற்கே யுரியது. இயம்புதற்கியலா எண்ணிக்கையுடைய காலந்தொட்டு ஒவ்வொரு துறையிலும் உன்னதமான நிலையை யடைந்திருந்த நம் நாட்டின் பெருமையைக் குறைக்கத் தோன்றியவர், நாமேயன்றிப் பிறநாட்டாரல்லர். ஆன்றோர், சாஸ்திரங்களின் வாயிலாகவும், பக்தியின் மூலமாகவும் சுகாதாரத்தை நமக்குப் போதித்தனர். இதைக்கொண்டே "சாஸ்திராயசா சுகாயசா" என்றும், "சாஸ்திரமே சுகம்" என்றும் நமது நாட்டில் பழமொழிகள் வழங்கி வருகின்றன. பிற நாட்டாரை விட புத்தி நுட்பம் வாய்ந்த நமது ஆன்றோர்கள் 'அப்பண்டத்தை நீ தீண்டற்க' என்று ஓர் குழந்தையினிடத்துச் சொல்லுவதைப் பார்க்கிலும் 'அது உம்மாச்சி-அங்குச் செல்லலொழி' என்று கூறின் அக்குழந்தை அப்பண்டத்தைத் தீண்டாது, கும்பிட்டு எட்டி நிற்பது அனுபவபூர்வமான இயற்கையாதல்போல, நமக்கு மேற்கூறிய சாத்திரவாயிலாகச் சுகத்தையும், தேக ஆரோக்கியத்தையும் போதித்தனர்.

நிற்க, பெரியோர்கள் தேகாப்பியாசத்தையொத்த பயிற்சிகளை ஆலயவழிபாடு, சூரிய நமஸ்காரம் முதலானவை வாயிலாக நமக்கு உபதேசித்தனர்; சுகாதாரத்தை 'புண்ணியத் துறைகளாடல், கற்பூரம் ஏற்றல், தூபதீபங்களிடுதலாகிய முறைகளால் துலக்கினர்; மனிதனுக்கு இயற்கையாக வரக்கூடிய வியாதிகளைப் போக்கிக்கொள்ள, தேரையர், அகத்தியர் முதலான ரிஷிகள் ஆயுர்வேத வைத்திய முறைகளைக் கற்பித்ததுமட்டுமன்றி, புண்ணிய தினங்களில் உபவாசமிருத்தலென்னும் வழியையும் நமக்குப் புலனாக்கினர். மேற்கூறியவற்றைச் சரிவரக் கையாண்ட பெரியோர்கள், தேக ஆரோக்கியம், திடபுத்தி, செல்வம், திடகாத்திரமுள்ள மகவு முதலியன பெற்றுச் சுகஜீவியராய் நூறு வருடங்களுக்கு மேலும் வாழ்ந்து வந்தனர். நவீன நாகரீகன் படையெடுக்கவே, அனுசாரம், அப்பியாசபேதம் முதலானவை நம் நவீனர்களுடைய மனதைக் கவர்ந்தன;மெய்ம்மறந்து நம் ஆன்றோர்களை 'முட்டாள்கள்' எனக் கூறவும் பலர் முற்பட்டனர். அவ்வனுசரணையின் காரணமாக, அற்ப ஆயுளில் மரணமும், சிறு பிராயத்தில் மூக்குக்கண்ணாடியும் மெய்ச்சோர்வும் மனித சமூகத்தில் சஞ்சரிக்கலாயின. வெகு சிலர், தம்மை யடிமையாக்கியாளும் நவீன நாகரீகமென்னும் கொடியோனுடைய ஆதிக்கத்தினின்று திமிறிச் சுயேச்சையையடைந்து, ஆன்றோர்களின் அப்பியாசத்தை யறிந்து, அனுசரித்து, ஆராய்ச்சி செய்யலாயினர். பலர், இன்னும் மதிமயங்கி அநாகரீகமென்னும் பாதையிலாடம்பரத்துடன் விரைந்து செல்லுகின்றனர். ஆனால், அந்த ரஸ்தாவின் முடிவிலோர் பெருங் குழியுளதென்பதை யவர்கள் உணராமலிரார்.

இனி, நாம் எழுதப்புகுந்த வியாசத்தைச் சற்றுப் பற்றுவோம்: நம் மூதாதையர்கள் தேகாரோக்கியத்திற்கும், நோயை விலக்குவதற்கும், ஆயுள்விருத்திக்கும் முக்கியமாக உபவாஸத்தையும், சுவாஸ பந்தத்தையு மனுசரித்து வந்தார்கள். அவ்வித முறைகளை யனுசரிக்க வியலாத நாம், 'பலர் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழ்ந்தார்கள்' என்று புராணங்களும், இதிகாசங்களும் கூறுவதைக்கண்டு நகைத்தல் புதிதன்று. யோகநிட்டையிலமர்ந்த பிரம்மஞானிகள் பல்லாண்டு பிராணாயாமம் (சுவாஸபந்தனம்) செய்தார்கள்; காற்றையுட்கொண்டு, வேறு எவ்வித உணவுமின்றி வதிந்தார்கள்; அதனால் ஆயுளை விருத்திசெய்துகொள்ளலும், போக்கிக்கொள்ளலும் அவர்களா லியன்றன; தேகாரோக்கியத்தைப் பெற அவர்கள் பட்டினியாயிருந்து வந்தார்கள். இல்லறத்தை நடாத்துபவர்களோ, ஏகாதசி, அமாவாசை, பூர்ணிமை, முதலான தினங்களில் பட்டினியையும், நித்யானுஷ்டான வகையில் சிறிது சுவாஸபந்தத்தையுஞ் செய்துவந்தனர். இனி இப்பட்டினி முறை எவ்விதம் தோன்றியதென்பதைச் சற்று ஆராய்வோம்:

இவ்வுபவாசமுறை தோன்றிய காலத்தை நாம் கணக்கிட்டுக் கூறுதலியலாது. பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக இந்த உபவாசமுறை நம் நாட்டின் ஜன சமூகத்திலே கலந்து, ஒவ்வொரு வீட்டிலும் சில அனுசரணைகளின் ஆதிக்கத்தைப்பெற்றது. பின்பு, நம் நாட்டிலே ஸ்தாபிக்கப்பட்ட புத்தம்,

சைவம், வைணவம் முதலான மதங்கள் தோன்றிய காலந்தொட்டு இம்முறை நம் மதாசாரத்தில் கலக்கப்பட்டு, ஒவ்வொரு மனிதனின் ஒழுக்கங்களிலும் இன்றியமையாததாகி விருத்தியடைந்துவந்தது. முதல் புத்தரும், பின்பு ஸ்ரீ சங்கரர், இராமாநுஜர், மத்துவர், தேசிகர் முதலான மதஸ்தாபகர்களும், இப்பட்டினியின் பலனைத் தெரிந்துகொண்டு தாமனுசரித்ததுமன்றி, தம் சீடர்களையு மவ்வழியிற் பழக்குவாராயினர். பின்பு, நமது இந்திய நாட்டிலேற்பட்ட சமயங்களெல்லாம் உபவாச சமயங்களாகிவிட்டன. உபவாஸம் மதாசாரத்துடனே கலக்கவே 'கொல்லாமை'யும், 'ஊனைத்தின்றூனைப் பெருக்காமை'யும் இவ்வுபவாச மதத்தின் முக்கிய கொள்கைகளாயின. (தொடரும்)

S. V. வரதராஜ ஐயங்கார், 'ஸரஸ்வதி நிலயம்', உறையூர்.

# அறநெறிப்பகுதி.

## ஆரிய சித்தாந்தம்.

### பொதுத் தர்மம்.

(209-ம் பக்கத் தொடர்ச்சி.)

கிருதயுகத்தில் மனுதர்மம் சிறந்தது. திரேதாயுகத்துக்குக் கௌதம ஸ்மிருதி சிறந்தது. துவாபர யுகத்தில் சங்கலிகிர ஸ்மிருதியும், கலியுகத்தில் பராசர ஸ்மிருதியும் பிரமாணமாகும். கிருதயுகத்தில் தாமாகவே சன்மார்க்கர்களிடம் சென்று தானங்கொடுப்பார்கள். திரேதாயுகத்தில் தன் வீட்டுக்கு வரவழைத்துக் கொடுப்பார்கள். துவாபரயுகத்தில் கேட்பவனுக்குத் தானங் கொடுப்பார்கள். கலியுகத்தில் தனக்கு ஊழியம் செய்கிறவனுக்குத்தான் தானம் கொடுப்பார்கள். இது யுகமகிமை. தானாகவே போய்க் கொடுக்கிற தானம் உத்தமம். அழைத்துக் கொடுப்பது மத்திமம். கேட்பவருக்குக் கொடுப்பது அதமம். சேவிப்பவனுக்குக் கொடுப்பது நிஷ்பலம். கிருதயுகத்தில் பதிதன் இருக்கும் தேசத்தை விட்டுவிடவேண்டும். திரேதாயுகத்தில் அவனிருக்கும் ஊரை விட்டுவிடவேண்டும். துவாபரயுகத்தில் பதிதனுடைய குலத்தைத் துறக்கவேண்டும். கலியுகத்தில் பதிதனை விலக்க வேண்டும். குலத்தை விடுதலாவது அவன் வீட்டில் போசனம் செய்தல், அவனுடன் சம்பாஷித்தல் இவைகளை விட்டிருத்தலாம். கிருதயுகத்தில் பதிதனுடன் பேசுவதாலும், திரேதாயுகத்தில் அவனைத் தொடுவதாலும், துவாபரயுகத்தில் பதிதன் வீட்டில் போஜனம் செய்வதாலும் ஒருவன் பாபியாவான். கலியுகத்தில் பாபகாரியங்களைச் செய்பவனே பாபியாவான். கிருதயுகத்தில் பெரியோரிட்டசாபம் அப்பொழுதே பலித்துவிடும். திரேதாயுகத்தில் பத்து நாட்களுக்குப் பின் பலிக்கும். துவாபரயுகத்தில் ஒரு மாதத்தில் பலிக்கும். கலியுகத்தில் ஒரு வருஷத்தில் பலிக்குமென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன.

பிராணவாயுக்கள் கிருதயுகத்தில் எலும்பைப்பற்றி நிற்கும். திரேதாயுகத்தில் மாமிசத்தைப்பற்றி நிற்கும். துவாபரயுகத்தில் இரத்தத்தையும், கலியுகத்தில் அன்னத்தையும் பற்றி நிற்கும்.

கலியுகத்தில் அதருமத்தால் தருமமும், பொய்யால் மெய்யும், திருடர்களால் அரசர்களும், பெண்களாற் புருஷரும் அடக்கப்பட்டுத் தாழ்வார்கள். கலியுகத்தில் அக்கினிஹோத்திராதி வைதிகக்கிருத்தியங்கள் அழிந்துபோகின்றன. குரு பூஜைகள் குறைந்துவிடும். கன்னிகைகளும் புத்திரரைப் பெறுவார்கள். அதருமம் மூன்றுபங்கும், தருமம் ஒருபங்குமாயிருக்கும். கலியுகத்தில் தர்மானுஷ்டானம் செய்யமாட்டார்கள். காமிகளும் போஜனப் பிரியர்களுமாகவே யிருப்பார்கள். எல்லாம் பிரமமென்று சொல்வார்கள். தர்மானுஷ்டானம் செய்கிற பெரியோர்கள் எப்பொழுது தாழ்த்தப்படுகிறார்களோ அப்போது கலியுகத்துக்கு விருத்திகாலமென்று தெரிந்துகொள்ளவேண்டும். கலியுகத்தில் பரான்னத்தினால் முகமும், தானம் வாங்குவதால் கைகளும், ஸ்திரீகளால் மனசும் தகிக்கப்படுகின்றன. வருணாசிரமங்களுக்கு உரியனவென்று வேதங்களால் கூறப்பட்ட விதிகளையும் தருமங்களையும் அனுஷ்டிப்பதற்குப் புத்தியுண்டாகாது. குருசிஷ்ய மரியாதையற்றுப்போம். தம்பதிகளுக்குள் சிரமம் இராது. ஔபாசனம் தேவாராதனை யில்லாமற்போய்விடும். ஒவ்வொருவனும் தன் மனதுக்குத் தோன்றியதையே ஸ்திரமாகவும் பிரமாணமாகவும் கொள்வான். (என்றால் சாஸ்திரங்களையும் பெரியோர் வசனங்களையும் அவமதிப்பான் என்பது.) மனதுக்குப் பிடித்ததெல்லாம் சாஸ்திரமாகும். தோன்றியவையெல்லாம் தெய்வமாகும். தங்களுடைய நிலைமையே ஆசிரமமாகும். தமகுத் தோன்றியபடியே தர்மங்களைச் செய்து மகிழ்வார்கள். அற்பப் பணமுடையவனும் தன்னைப் பெரிய பணக்காரனாக மதித்திருப்பான். பணமில்லாத புருஷனை மனைவி மதியாமலிருப்பாள். அவனையும் விடுவாள். பணம் பெருத்தவனே பெண்களுக்குப் புருஷனாவான். பொருள் போகங்களிவற்றைத் தாமாத்திரம் அனுபவிப்பார்கள். பெண்கள் சம்போக ஆசையினால் வியபிசாரிகளாவார்கள். பிராமணர்கள் ஸ்நானம் செய்யாமல் போஜனம் செய்வார்கள். தேவ பிதிர் கிருத்தியங்களை விட்டுவிடுவார்கள். பஞ்ச மதிகமாகும். ஜனங்கள் பரதேசங்களை நாடிச்சென்று அற்ப தானியத்தைப் புசிப்பார்கள். வேதாகமங்கள் அழிந்து ஜனங்கள் பாஷண்டர்களாவார்கள். அதர்மத்தால் ஆயுசு குறையும். மாமனாரும் மாமியாருமே ஒருவனுக்குக் குருவாவார்கள். மைத்துனன் மச்சினியே சிநேகராவார். மாதா பிதாக்களை மதிக்கமாட்டார்கள். தன் காரியமே பெரிதென்று கருதுவார்கள். வேதம், ஔபாசனம், யாகம், சிராத்தம் முதலியவைகளில்லாமற்போய்விடும். அதனால் தருமங் குறைந்துவிடும். எங்கேயாவது ஓரிடத்தில் சிறிது தருமம் இருக்கும். ஆனால் கிருதயுகத்தில் பெரும் தவசால் அடையும் பலனைக் கலியுகத்தில் சொற்பகாலத்தில் அடையலாம். வீரஹத்தி, புருண (சிசு) ஹத்தி முதலிய கொடிய செய்கைகள் நிறைந்திருக்கும். அரசர்கள் பெரும்பாலும் சூத்திரர்களாயிருந்துகொண்டு

பிராமணர்களை வருத்துவார்கள். பிரமா, விஷ்ணு, சிவன், வேதம், புராணம் இவைகளை நிந்திப்பார்கள். சூத்திரர்கள் சந்நியாசி வேஷம் தரிப்பார்கள். தருமோபதேசம் செய்வார்கள். ஆசாரங்களை அநுஷ்டிப்பார்கள். பெரும் பாலும் இராஜசேவைசெய்யும் சூத்திரர்கள் பிராமணர்களை அடிப்பார்கள். பிரா மணர்கள் அரசனுடைய சமையத்தை எதிர்பார்த்துக்கொண்டு வாசற்படியிற் காத்திருப்பார்கள். பல்லக்கு ஏறும் சூத்திரர்களை அண்டிப் பிராமணர்கள் அவர்களைச் சேவிப்பார்கள். சூத்திரர்களுக்கு வேதம் ஓதுவிப்பார்கள். நாஸ் திகர்கள் வேத பதங்களை வெகு கோரமாகப் படிப்பார்கள். சிஷ்டர்கள் தவசு முதலியவற்றின் பலனை விற்பார்கள். சந்நியாசிகள் அநேகரிருப்பார்கள். வேதார்த்தம் அறியாமல் அவற்றைக் கெடுப்பார்கள். தேவர்களை இலௌகிக கானங்களால் துதிப்பார்கள். பிராமண க்ஷத்திரியர்கள் சாக்தர்களாகவும் பாசுபதர்களாகவும், பாஞ்சராத்திரிகளாகவு மிருப்பார்கள். தக்ஷயாகத்தில் ததீசி முனிவரால் சபிக்கப்பட்டவர்களும், கௌதமரால் சபிக்கப்பட்டவர் களும் சிவ விஷ்ணுக்களை நிந்திப்பார்கள். இவர்கள் பிராமணகுலத்தில் பிறப் பார்கள்.

யுகந்தோறும் தருமம் வேறானதால் கலியுகத்தில் அவ்வவ் யுகதர்மங்களே அனுஷ்டிக்கப்படும். கலியுகம் பாபயுகமாதலால் அந்த யுகத்தில் பாபம் செய் தவர்கள் நிந்திக்கப்படமாட்டார்கள் என்று பராசரர் சொன்னார். தருமவிய வஸ்தை செய்யும் சாஸ்திரமும் வீணாய்ப்போய்விடும். ஆகையால் அவர்களை நிந்திக்கப்படாது. அநேக ரிஷிகள் அந்தந்த யுகத்துக்கு ஏற்ற தருமங்களைச் செய்திருக்கிறபடியால் அதை அறிந்து வியவஸ்தை செய்துகொள்ளவேண்டும். யுகதருமத்தை யறிந்து விதி நிஷேதங்களை யுணர்ந்து தருமத்தைச் செய்ய வும், நிஷேதத்தைத் தள்ளவும், பிராயச்சித்தம் செய்விக்கவும் சாமர்த்திய முள்ளவனாகி இருக்கிறவன் அவைகளைச் செய்யாமலிருந்தால் அவன் நிந் திக்கத் தக்கவனாவான். அவனைக்குறித்தே புருணஹத்தியாதி நிந்தா வசனங் கள் ஏற்பட்டன. சக்தியில்லாதவர்களுக்கு இல்லை. கிருதயுகத்தில் பத்து வருஷத்தில் செய்யப்படும் தவப்பயனை, திரேதாயுகத்தில் ஒரு வருஷத்தில் அடைவான். துவாபர யுகத்தில் ஒரு மாதத்தில் அடைவான். கலியுகத்திலோ ஒரே நாளில் அடைவான். கிருதயுகத்தில் தியானத்தால் பலனடையலாம். திரேதாயுகத்தில் யாகத்தாலும், துவாபரயுகத்தில் பூஜையினாலும், கலியுகத் தில் தெய்வநாமங்களைச் சொல்வதாலும் பலனடையலாம். அநேக துர்க் குணங்கள் நிறைந்த கலியுகத்துக்கு இந்த அற்புதகுணம் நிறைந்திருக்கிறது. ஆதலால் புத்திமான்கள் எளிதிற் பலனடையலாம். இந்த யுகத்தில் நல்ல நடக்கையும், பரிசுத்தமான திரவியமும், மனச்சுத்தியும் இல்லாமற்போம். ஆனாலும் சத்தியம்மட்டும் தவறாமலிருந்தால் அதுவே அவனைக்காக்கும்.

முக்கிய காலத்தில் அவசியம் செய்யவேண்டிய கர்மம் அக்காலத்தில் செய்யப்படாவிட்டால் கௌணகாலத்தில் செய்யவேண்டும். செய்யும்போது பிராயச்சித்தம் செய்துகொண்டு செய்யவேண்டும். பகலில் செய்யவேண்டிய

கர்மம் தவறினல் இரவு ஜாமத்துக்குள் அதைச் செய்யவேண்டும். முக்கிய காலத்தில் கர்மங்களைச் செய்யவேண்டிய சாதனப்பொருள் கிடைக்காவிட்டால் கௌணகாலத்தை யெதிர்பார்க்கக்கூடாது. தான், புத்திரன், பெண், உபாத்தியாயர், கூடப்பிறந்தவன், தகப்பன், சிநேகன் இவர்கள் யாகத்திலும் தர்மகாரியத்திலும் சமானஸ்தர்கள் ஆகிறார்கள். என்றால் இவர்களாற் செய்யப்பட்ட கர்மம், தான் செய்ததுபோலாகிறது என்று ஸ்காந்தபுராணம் கூறுகின்றது. கலியுக இலக்கணம் இதுகாறும் கூறியது. யுகவலிமையினல் பிரஜைகள் கர்மாகர்மங்களை அறிந்து செய்யமாட்டார்கள். அவர்களைத் தூஷிக்கப்படாது. யோக்கியனு யிருக்கிறவன் தூஷித்தால் அவனும் பாபியாய்விடுவான். இந்தக் கலியுகத்தில் பிறரை நிந்தை கூறுவதில் ஜனங்களுக்குப் பிரியம் உண்டாகும். அதனல் யோக்கியர்களை நோக்கிக் கூறப்பட்டது. ஆதலால் சிஷ்டர்கள் இவ்விஷயத்தில் ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பது ஸ்மிருதிகளின் கருத்தாதலால் அதையறிந்து அடங்கி நடப்பதுதான் சிஷ்டர்களுக்குத் தகுதியென்பதை விளக்குதற்கே ஸ்மிருதிகளிலிருந்து பொறுக்கி எழுதப்பட்டது. (தொடரும்.)

**சிவானந்தசாகர யோகீஸ்வரர்.**

## ஞானப்பகுதி.

### வேதாந்த சாரசங்கிரக வசனம்.

(215-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, ஒவ்வொன்றாக எடுத்து அவற்றின் நிஜ நிலையை விவரிக்கிறார்:—

**கர்ப்பவாசம்:**—(தாயின் கர்ப்பத்தில் தங்கியிருக்குங் காலத்திலுண்டாகும் துன்பங்களும், ஜனனகாலத்திலுண்டாகும் துன்பங்களும் பல. அதன் பிறகும் எய்தும் இன்னல்களும் எண்ணற்றன. சுருங்கக் கூறுமிடத்து 'தோன்றி நின்றழியப்படும் கொடும் பிறப்பில் துன்பமேயன்றி எட்டுணையும், ஊன்றி நெஞ்சகத்தோர்ந்திடிற் பிறிதிலை' என்னும் பெரியார் வாக்கின்படி பிறவியானது துக்க வடிவானது. அவற்றிற் சில இங்குச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.)

தன் தாயின் கர்ப்பத்தில் மலமூத்திரங்களுக்கிடையில் அகப்பட்டும், அம்மலத்தில் வசிக்கும் புழுக்களால் கடியுண்டும், தாயின் வயிற்றிலுள்ள சடராக்கினியால் தகிக்கப்பட்டும் கிடக்கும் கர்ப்பவாச நிலைமையை விசாரித்தறிந்தால் எவன்தான் அதை வெறுக்காமலிருப்பான்?

**பால்யம்:**—தன் மலமூத்திரங்களில் புரண்டுகொண்டிருப்பதும், எப்பொழுதும் மல்லாக்கப் படுத்துக்கிடப்பதும், பாலக் கிருகாதி தோஷங்களால்

பீடிக்கப்படுவதுமாகிய பால்யாவஸ்தையின் நிலையை விசாரித்துப் பார்க்குமிடத்து எவன் அதில் விரக்தியடையாமலிருப்பான்?

**குமாரப்பருவம்:**—பெற்றோரும் சகோதரருமாகிய தம்மைச் சேர்ந்தவர்களும், அன்னியரும் அடிப்பதனால் உண்டாகும் துன்பமும், அதனால் மிகுந்த சஞ்சலமும், அறியாமையால் அயோக்கியமான காரியங்களைச் செய்தலும், வெறுக்கத்தக்க வாழ்க்கையை அடைதலுமாகிய குமாரப்பருவத்தின் ஸ்திதியை ஊன்றிப்பார்த்தவன் அதனிடத்து வெறுப்புக்கொள்ளாமலிருப்பானோ?

**யௌவனம்:**—தனக்குச் சமானமானவரில்லை யென்னும் மதம் மிகுந்து பெரியோர்களை அலட்சியஞ் செய்தலும், மிகுந்த காமுகனாய்த் திரிதலும், காலநியமம் தவறியிருத்தலும், பெண்களின்மேல் கொண்டுள்ள காதலால் அவர்கள் வார்த்தையை மீறமுடியாமல் தீய காரியங்களிற் பிரவேசித்தலுமாகவுள்ள இதன் நிலைமையை ஆராய்ந்தறிந்தால் எவன்தான் இப்பருவத்தினிடத்து வைராக்கியம்கொள்ளாமலிருப்பான்.

**விருத்தாப்பியம்:**—இப்பருவத்தில் தன் சரீர நிலைமை மாறி நரைதிரைகள் தோன்றி அழகு குன்றும். 'கிடக்கின்றான் கிழவன்' என்று எல்லாரும் அசட்டை செய்வார்கள். எந்தக் காரியத்தையும் செய்யவும் முடியாமல் தைரியக் குறைவு உண்டாகும். அறிவும் மழுங்கும். பித்தசுரம், மூலவியாதி, க்ஷய ரோகம், குன்மநோய், சூலை, கபம் முதலான கொடிய பயங்கரமான வியாதிகள்வந்து குடிகொள்ளும். அதனால் துக்கமும், துர்க்கந்தமும், அனாரோக்கியமும், வியாகூலமும் மிகும். இத்தகையதாகிய விருத்தாப்பியத்தின் நிலைமையையறிந்தால் எவன்தான் இதில் விரக்தியடையான்.

**மரணகாலம்:**—உயிர் உடலைவிட்டு நீங்குவதாகிய மரணத்தறுவாயில் எமதரிசனத்தால் உண்டாகும் பயம், உடல் நடுக்கம், பூட்டுகள் தோறும் குத்தலெடுத்தல், மேல்சுவாசம் விடுதல் முதலாகிய பயங்கரமான துன்பங்கள் நேரிடும். இவற்றை விசாரித்தறிந்தவனுக்கு விராகம் உண்டாகத் தடையுண்டோ?

**மரணாந்தரம்:**—ஜீவனை காலதூதர் அக்கினியாற்றிலும், கும்பீபாகம், பூதி, அசிபத்ரவனம் முதலான நரகங்களிலும் தள்ளிக் கொடுமையாகத் துன்புறுத்துவர். (பாவிகளைத்தான் யமதூதர் தண்டிப்பர் புண்ணியஞ் செய்தவர்களுக்கு நரகவேதனை யுண்டாகாதன்றோவெனின்) இவ்வுலகில் புண்ணியஞ்செய்தவர்கள் அப்புண்ணியத்தின் பலனாக சுவர்க்கலோகத்தையடைந்து சுகங்களை யனுபவித்து, அந்தப் புண்ணியப்பலன் தீர்ந்தவுடன் தேவர்களால் தள்ளப்பட்டவர்களாய்ச் சரீரம் பொடிப்பொடியாய்ப் போகும்படி நக்ஷத்திரவடிவமாய்ச் சொர்க்கத்தினின்று கீழேவிழுவார்கள்.

இந்திராதி தேவர்களாய்ப் பிறந்தாலோவெனின், அவர்களும் கடவுளுக்குப் பயந்து தங்கள் காரியங்களைச் செவ்வையாய்ச் செய்யவேண்டியவர்களாயிருக்கின்றனர். தவிர அசுரர்களாலும், இராக்கதர்களாலும் மகா கொடிய துன்பத்தை யனுபவிக்கின்றனர். (மேலும் அவர்களுக்கும் பசி, தாகம், நோய்,

மரணம் முதலியன உண்டு. ஆகையால் இந்திரன், வருணன், வாயு, குபேரன் முதலான திக்குப்பாலகர்களும் பலவகையிலும் துன்பத்தை யடைபவராயிருக்கின்றனர்.)

சக்கரவர்த்திமுதல் பிரமன் ஈறுகவுள்ள யாவர்க்கும் உண்டாகும் சுகானுபவங்களில் ஏற்றத்தாழ்வுகளிருப்பதாகக் காணப்பட்டாலும் அத் தாரதம்மியம் உண்மையில் இல்லை. எல்லோருடைய சுகானுபவங்களும் ஒன்றே. சாலோகம், சாமீபம், சாரூபம் முதலான பதவிகளும் நற்கருமங்களாலுண்டாகின்றவை. கர்மத்தாலுண்டாவது நித்தியமானதாகாது. அநித்தியமேயாகும் என்பது நியதி. ஆதலின் சாலோகாதிபதவிகளும் கருமத்தாலுண்டாகின்றவையாயிருத்தலின் அநித்தியமானவையேயாகும்.

[இராஜா முதல் பிரஹ்மாபரியந்தமாகவுள்ளவர்களின் சுகங்களின் பேதம் இவ்வாறு கூறப்படுகின்றது:—பூமிக்கு இறைவனும், ரோகமின்மை, யௌவனம், திடகாத்திரம், வில்வித்தை என்பவற்றையுடைய அரசனிடத்தில்தான் மனித சுகத்திற்கு முடிவுண்டாயது. மானுட கந்தர்வனென்று சொல்லப்படுபவன் அந்த அரசனிலும் நூறுமடங்கு சுகத்தை யடைகிறான். தேவகந்தர்வன் என்பவன் அவனைக்காட்டிலும் நூறுமடங்கு சுகமுள்ளவன். பிதிரர் என்பவர் அவனினும் நூறுமடங்கு சுகமனுபவிப்பவராவர். பிதிரரைப் பார்க்கிலும் அஜானதேவர்கள் நூறுமடங்கு சுகிகள். கர்ம தேவர்கள் அவர்களைவிட நூறுமடங்கு சுகிகள் முக்கிய தேவர்களுடைய சுகம் அவர்களினும் நூறுமடங்கதிகம். இந்திரன் சுகம் அவர்களினும் நூறுமடங்கதிகம். சகல தேவர்களுக்கும் குருவான பிரகஸ்பதியின் சுகம் இந்திரனினும் நூறுமடங்கதிகம். பிரஹ்மாவின் சுகம் அவரினும் நூறுமடங்கு அதிகமானது. (விசாரசாகரம்.)]

இவ்வாறு ஏற்றத் தாழ்வுகளாகக் காணப்படும் பதவிகள் யாவும் துக்கத்தையே யுண்டாக்கும். இவ்வுலகத்தில் தாழ்ந்த பதவியிலிருப்போர் தம்மினும் உயர்பதவியிலிருப்போரைப் பார்த்துத் துக்கப்படுகின்றனர். இது பிரத்தியக்ஷம். இதைப்போலவே இதர வுலகங்களிலிருப்போரும் தம்மினும் மேலான பதவிகளிலிருப்போரைப் பார்த்துத் துக்கிப்பார்கள் என்பது அநுமானத்தால் அறியக்கிடக்கின்றது. (இவ்வுலகத்திலிருப்பதைப்போலவே அவ்விடத்திலும் பதவிகளின் ஏற்றத்தாழ்வுகளுண்டென்று முன்னே சொல்லப்பட்டது.) இவற்றையெல்லாம் விசாரித்தறிபவன் இவற்றினிடத்து வெறுப்புக்கொள்ளாதிருப்பனோ? இரான்.

(இனி இவ்வுலகத்திலுள்ள மனை முதலியவற்றின் நிலைமையை விவரிக்கிறார்.)

உலகத்தில் சனங்கள் வெறுக்கத்தக்கவை யாயும், அழிந்துபோகக் கூடியவையாயுமுள்ள மனை, மனையாள் முதலான பொருள்களினிடத்து அபிமானமுடையவர்களாய்ப் பரமபுருஷார்த்தமாகிய முத்தியை யடைய முயலாமல் வீணாக மரணத்தையடைகிறார்கள். இவ்வாறு உலகர் தங்கள் அறியாமை

யால் அநித்தியமானவற்றை நித்தியமெனவும், துக்கவடிவமானவைகளைச் சுக மெனவும் கருதி முடிவில் தங்கள் சன்மத்தை வீணாக்கி மாண்டுபோவதைப் பார்த்துக்கொண்டிருக்கும் அறிவுள்ளவன் அவற்றினிடத்து ஆசைகொள் வானோ?

இந்த விஷயங்களை யெல்லாம் விசாரித்துப் பார்க்குங்கால் ஸ்திரீ, மனை முதலிய வஸ்துக்களினிடத்து யாது சுகமுளது? அஞ்ஞானத்தால் அகக் கண் குருடாயிருக்கும் அவிவேகிகளே சுகமுளதென்று மயங்குவார்கள். விவேகிகள் மோகமடையமாட்டார்கள்.

["ஆலையிற் கரும்புஞ் செக்கி லாட்டிய வெள்ளும் போலச்
சாலவே நெரிந்து கோதாய்ச் சனிக்குங்கா லந்தோ துன்பம்
பாலனி லறிவொன் றில்லாப் பண்பினால் மிகவுந் துன்பம்
கோலியே யமுக்கிக் காது குத்தலா திகளால் துன்பம்."

"குழவியி லறியாத் துன்பம் குரவரால் குமாரம் துன்பம்
கழிதரு காம நோயால் காளையாம் பருவம் துன்பம்."

"ஆனமுற் பயனு கர்ந்தா லசங்கித மாக வோற்
றீனமாய் விழும ரம்போ லிமையவர் விழலால் துன்பம்."

"தீய வசுரர் பகையுண்டு செற்ற மார்வ மிகவுண்டு
நோயுண் டனங்க னுருண்டு நோய்கட் கெல்லாந் தாயான
காய முண்டு கைதொழவேண் டினரு முண்டு கற்பத்தே
மாயுந் தன்மை யுண்டானால் வானோர்க் கென்னை வளனுண்டே?."]

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

உ

சிவமயம்.

# சைவப்பகுதி.

(232-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 7. சைவக் கிரியைகளின் நோக்கம்.

சைவக்கிரியையென்பது ஆன்மா சிவமாந்தன்மையை அடைவிக்கும் செய லாகும். அது சந்தியாவந்தனம், சிவபூஜை, ஆலயசேவை யென மூத் திறப்படும்.

### 1. சந்தியாவந்தனம்.

சந்தியாவந்தனம் என்பது சம்=செவ்வே, த்யா=தியானித்து, வந்த னம்=வழிபடுதல் எனப் பொருள் பெறுவதால், ஆன்மா சிவத்தைச் செவ்வை

யாய்த் தியானித்து வணங்கி மகிழச்செய்து அதனருளால் சிவமாந்தன்மையை யடைவதாகும். அதற்குச் செய்யப்படும் கிரியைகள் ஜலசுத்தி, விபூதிசுத்தி, தேகசுத்தி, ஆன்மசுத்தி, தியானம், தருப்பணம், செபம், தோத்திரம் என்பனவாம்.

ஜலசுத்தியாவது : நிரீக்ஷணாதி எண்வகைச் சுத்திகளால், மாயாகாரிய தோற்றமாகிய நீரில் உள்ள அசுத்தங்களை மந்திரபூர்வமாக நீக்கி அதில் வியாபித்திருக்கின்ற சிவத்தைப் பிரகாசிக்கச் செய்து ஞானாமிர்தத்தைப் பொழிந்து சிவமயமாக்குதல்.

விபூதி சுத்தியாவது : உத்தம பசுவின் கோமயத்தாலமைந்த விபூதியில் நிரீக்ஷணாதி நான்கு சுத்திகளைச் செய்து மலத்தன்மையை நீக்கி மந்திர சக்தியால் சிவமாந்தன்மையை அதற்கு உண்டாக்குவது. இதைத் தேகத்தில் விதிப்படித் தரிப்பதால் தேகத்திற் பாசசம்பந்தம் நீங்கும். பசு = ஆன்மா, மலம் = ஆணவமலம், பௌதிகாக்கினியாற் றகிப்பது = ஞானாக்கினியாற் றகிப்பது. எனவே பசுமலத்தைத் தகித்து நீறாக்கித் தரிப்பதானது ஆணவ மலத்தை ஞானாக்கினியாற் றகித்து நீறாக்கித் தரிப்பதற்கறிகுறியாகும்.

தேகசுத்தியாவது : விபூதி சுத்தியாற் புனிதமான தேகத்தைக் கரநியாச அங்கநியாஸங்கள் மூலமாகச் சிவாகாரமாக்குவது.

ஆன்மசுத்தியாவது : உண்மைப் பிராணாயாம மூலமாகக் கன்மசோதனை செய்து மலநாசம்பண்ணி ஆன்மாவைச் சுத்திசெய்வது.

தியானமாவது : முற்கூறிய முறையிற் புனிதமடைந்த ஆன்மா குரு உபதேசித்த நெறியிற் சிவத்தைத் தியானித்துச் சிவமாந்தன்மை யடைதல்.

தருப்பணமாவது : சுத்திசெய்யப்பட்ட நீராற் சிவபிரானையும், அவர் பரிவாரங்களையும், குருவையும், அவர் பரம்பரையையும், பிதுரர்களையும் மந்திரபூர்வமாக மகிழச்செய்தல்.

செபமாவது : விதிப்படி அமைக்கப்பட்ட செபமாலைகொண்டு பக்குவத்துக்கேற்ப குரு உபதேசித்த மந்திரத்தை உபதேச முறைப்படி எண்ணிக் கணித்தல். இதனால் முன் செய்த தியானம் சித்தியுறுவதுடன் வாசனாமலமும் பலஹீனமடையும்.

தோத்திரமாவது : இதுகாறும் தனக்கு உண்ணின்றும் முன்னின்றும் அநுக்கிரகித்து வருகின்ற கடவுளையும், அவர் அநுக்கிரக வடிவங்களையும், அவரதிகாரம்பெற்ற சிரேஷ்டர்களையும், அவரநுக்கிரகம்பெற்ற பெரியோர்களையும் வாழ்த்தி வணங்குவதாம்.

## 2. சிவபூசை.

சிவபூசையாவது : சிவபெருமானைச் சிவலிங்க வடிவமாகக்கொண்டு, சிவாகமநெறியில் திரவியசுத்தி முதலிய ஐவகைச் சுத்தி செய்து, சத்தியாதி சத்தி பரியந்தம் அமைந்த ஆசனம், மூர்த்தி மூலங்களாற் சௌராதி சண்டாந்தம் பூசித்து வழிபடுவதாகும். இதை விரிக்கிற் பெருகும்.

## 3. ஆலயசேவை.

ஆலயசேவையாவது: சிவாகமவிதி பிறழாது அமைக்கப்பெற்றுச் சிவாகம விதிப்படி முட்டின்றிப் பூசை நிகழும் சிவாலயத்திற் சென்று வணங்கி வழிபடுவதாம். சிவாகம நெறியிற் செய்யப்படும் பூசையே சிறப்புடைத்து; வேறு நெறியிற் செய்யப்படுவன ஆன்மா சிவமாந்தன்மையை அடைவியா. ஏனெனில்? சைவக்கிரியைகளில் மண்டபம், குண்டம், வேதிகை முதலியன வகுத்துச் சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்தமாயா தத்துவங்கள் ஐந்தையும் ஐந்து ஆவரணங்களாகப் பாவித்து, சுத்தவித்தியா தத்துவமாகிய ஐந்தாம் ஆவரண மண்டபத்திலே இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களையும், அவர்களது வச்சிர முதலிய ஆயுதங்களையும் பாவித்து, சதாசிவ தத்துவத்திலேயுள்ள வேதிகையில் சதாசிவ மூர்த்தியும், மனோன்மணியும் வீற்றிருப்பதாகவும், ஈசுவர தத்துவத்திலே அனந்தாதி அஷ்டவித்தியேசுரரும் வாமாதி அஷ்டசத்திகளும், சதாசிவமூர்த்தியைச் சூழ்ந்திருப்பதாகவும், கும்பமிசைப்பாவித்து, சத்திதத்துவமாய் நிவிர்த்தியாதி பஞ்சகலமயமாயுள்ள குண்டமத்தியில் சிவதத்துவமிசை விளங்கும் நிஷ்கள சிவத்தைச் சிவாக்கினியின் இருதயத்திலே பூசித்து அச்சிவம் எழுந்து சதாசிவ மூர்த்தியினும் கும்பமூர்த்தியினும் தங்கி அதிட்டித்து அங்கிருந்து ஆன்மாக்களுக்கு மலநீக்கமும் சிவப்பேறும் அளித்துச் சதாசிவ வடிவாக்கி அபரமுத்திப்பேறு கொடுப்பதாகப் பாவிக்கப்படுகின்றது.

ஆகையால் இதுகாறும் கூறியவாற்றால் ஆன்மா தன்னைப் பந்தித்த பாசம் நீங்கி, பசுபோதங்கெட்டுச் சிவமாந்தன்மை யடைந்து சிவத்திலிரண்டறக்கலப்பதே சைவக்கிரியைகளின் நோக்கமென்பது விளங்குகின்றது. இந்நோக்கமில்லாத ஏனைய பூசைகள் விலக்கத்தக்கனவாகும்.

## 8. ஆலயவமைப்பு.

முத்தி சாதனமாகப் பெரியோராற் பொதுவாகக் கூறப்பட்ட சாதனங்கள் மூன்று. அவையாவன: மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவாம். அவற்றுள் தலம் என்பது: ஆலயத்தையும் குறிக்கின்றதால் ஆலயம் எங்ஙனம் முத்தி சாதனமாகுமென்பதை அதன் அமைப்பைக்கொண்டு விளக்குவாம்.

சிவாலயங்கள் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நான மண்டபம், தம்பமண்டபம், நிருத்தமண்டபம் எனும் ஆறு உறுப்புக்களையும், ஐந்து பிராகாரங்களையும் உடையன. கர்ப்பக் கிரகமாதி ஆறு உறுப்புக்களும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞையென்னும் ஆறாதாரங்களைக் குறிக்கின்றன. ஐந்து பிராகாரங்களும் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் எனும் பஞ்சகோசங்களை, அல்லது தூல சரீரம், சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுகசரீரம், காரணசரீரம் எனும் பஞ்ச சரீரங்களைக் குறிக்கும். ஷை பிராகாரங்கள் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை எனும் பஞ்சகலைகளையும்

குறிக்கும். பஞ்சகலைகளைக் குறிப்பதால் அவற்றிலடங்கிய ஏனைய அத்வாக்க ளையுங்குறிக்கும். சிவலிங்கம் சதாசிவமாகும்; சோமாஸ்கந்தர் மஹேசுரராவர்; சந்திரசேகரர் உருத்திரமூர்த்தியாவர்; ஆலயம் விஷ்ணு சொரூபமாகும்; சிவலிங்கம் பதியாகும்; நந்தி பசுவாகும்; பலிபீடம் பாசமாகும்; துஜஸ்தம் பம் பதியாகும்; துவஜபடம் திரோதானசத்தியாகும்; கொடியில் இடபம் ஆன் மாவாகும்; கொடிக்கயிறு பாசமாகும்; கொடியில் திரிசூலம், ஆரணி ஜனனி ரோதயித்திரி எனும் மூன்று சத்திவடிவாகிய திரோதாயியாகும்.

கர்ப்பக்கிரகத்தில் தூபியும் சிவலிங்கமு மிருக்கின்றன. பிராசாதயோகா வஸ்தையில் இருதயம் மூலாதாரத்தானமாய் விளங்கும். எனவே கர்ப்பக்கிர கம் மூலாதாரமாகும். இருதயமானது தத்துவ சொரூபமான கமலவடிவாய்ப் பாவிக்கப்படும். அவ்விருதய கமலத்தை உணர்த்துவது கர்ப்பக்கிரகத்தின் மேல் விளங்கும்தூபி; அத்தூபியோடு சார்ந்த கர்ப்பக்கிரகத்தில் சதாசிவ மூர்த்தி விளங்குதல் இருதயகமலத்தில் சதா சிவமூர்த்தி விளங்குதலை உணர்த் தும்.

முப்பத்தாறு தத்துவங்களும் ஐந்து கோசங்களாய் அல்லது சரீரங்களா யிருக்க, தத்துவமயமான இருதய கமலத்தில் ஆன்மாவையே இலிங்கமாகக் கொண்டு சதாசிவமூர்த்தி விளங்குந் தன்மையை, முப்பத்தாறு தத்துவங்களும் ஐந்து ஆவரணமாய் விளங்கும் ஆலயத்தில் தத்துவமயமான கெர்ப்பக்கிரகமா கிய கமல மத்தியில் சதாசிவமூர்த்தி சிவலிங்க ரூபமாக விளங்குகின்றது குறிப் பிடுகின்றது.

## 9. மூர்த்திவிளக்கம்.

சிவலிங்கமானது மூன்று மாயைகளைக் குறிக்கின்ற மூன்று பாகங்களை யுடையதாய், அம்மாயையினின்றும் விரிந்த நிவிர்த்தியாதி ஐங்கலைகள், பிருதி வியாதி முப்பத்தாறு தத்துவங்கள், காலாக்கினியாதி 224-புவனங்கள், அகா ராதி ஐம்பத்தோர் வன்னங்கள், ஓம் வியோவியாபினே முதலான 81-பதங்கள், ஈசாநாதி பதினொருமந்திரங்களாகிய ஆறத்துவாக்களின் வடிவாய் மும்மூர்த்தி சொரூபமாய்ச் சிவத்துக்குரிய தூல சூக்கும காரண லிங்கங்களை உணர்த்திநிற் கும் சிவ வடிவாகும். இதன் விரிவைச் சித்தாந்தப் படத்திலும் அதன் விளக் கத்திலும் சிவாகமங்களிலும் காணலாம்.

## 10. தீர்த்தம்.

தீர்த்தமானது பிறவி வெப்பத்தால் வெதும்பிய உயிர்களது துன்பந் தீரும்பொருட்டுத் தண்ணீர் சொரூபமா யமைந்து தன்னையடைந்து தரிசித் துப் பரிசித்து உட்கொண்டவர்களுக்குக் குளிர்ச்சியைத் தந்து பிறவிநோ யைத் தவிர்க்குந் திருவருட் சத்தியாகும்.

(தொடரும்) வாலையாநந்தம்.

# மாணவர் பகுதி.

## ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(223-ம் பக்கத் தொடர்ச்சி.)

### " அறனை மறவேல். "

"அறனை-தருமத்தை, மறவேல்—(மனிதனே! நீ ஒருபோதும்) மறவாதே" என்பது இதன் பொருள்.

மனிதர்க்குத் தருமமானது, இம்மையில் புண்ணியத்தையும், புகழையும், செல்வத்தையும், இன்பத்தையு முண்டாக்கி, மறுமையில் சுவர்க்காதி சுகங்களையும், என்றுமழியாப் பேரின்பத்தையும் தரக்கூடியது. இதனை இவ்வுலகத்தில் செய்வோர் இத்தகைய இன்பங்களை யடைவர்; இதனை மறந்து கைவிடுவோர் பலராலும் இகழப்பட்டுத் தீயகதிகளுட் புகுந்து துன்புறுவர். இவ்வாறு தருமத்தை மறந்தோர் சங்கடத்திற்குள்ளாவரென்பதை அடியில்வரும் கதை விளக்கும்:

பண்டைக்காலத்தில், ஒரு நகரத்தில், வியாபாரி ஒருவர் இருந்தார். அவருக்கு வியாபாரத்தோடு விவசாயம் முதலிய வேறு சில தொழில்களுமுண்டு. அவற்றில் நல்ல வரும்படி கிடைக்கும். அவ்வாறு பொருள்வரவு இருந்தும், அவர், தருமகாரியங்களில் சிறிதும் செலவழிப்பதில்லை; சாப்பாட்டு விஷயத்திலும் அதிகச் செலவு செய்யமாட்டார்; பிச்சைக்காரரைக் கண்டால் பேசாமல் உள்ளேபோய் மறைந்துகொள்வார். யாரேனும், 'பணத்தை நல்ல மார்க்கத்தில் செலவிடவேண்டும்' என்று அவருக்குத் தருமோபதேசம் செய்தால், அவர், "இது, கருநாடகத்துப் பைத்தியக்காரர்கள் பேசும் உபயோகமற்ற வார்த்தை; கையிலுள்ளதைச் செலவழித்துவிட்டால் அதனால் நமக்கென்ன இலாபம்? மனிதர் தமக்குக் கிடைப்பவைகளைச் சேர்த்துப் புதைத்துவைத்தாலல்லவா அவற்றால் பின்னர் சுகம் பெறுவார்கள்" என்று தம் மனப்போக்கிற்குத் தக்கபடி பேசுவார்.

இப்படியே அவர், பேசிக்கொண்டு, தம் வயிற்றுக்கும், தம்மைச்சார்ந்தவர்களுக்கும் அரைச்சாப்பாடு, கால்சாப்பாடு போட்டுப் பலவருஷங்கள் வரை சேர்ந்த பணங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி அவற்றிற்குத் தங்கம்வாங்கி உருக்கி ஒரே உருண்டையாகச் செய்து ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாக ஓரிடத்தில் புதைத்துவைத்துவிட்டு, அவ்வாறு புத்திசாலித்தனமாகத் தாம் குறித்தகாரியத்தை நிறைவேற்றியதற்கு அகமகிழ்ந்திருந்தார். அவர் உருட்டிப் புதைத்த தங்கம் ஒரு விளாங்காய்ப் பிரமாணமிருந்தது. அவர், அடிக்கடி, தங்கம் புதைக்கப்பட்ட இடத்திற்குப் போவதும், "நம்முடைய தங்க உருண்டை இங்கே யிருக்கிறதல்லவா!" என்று ஆனந்தசாகரத்தில் மூழ்குவதுமா யிருந்தார்.

அவ்வாறு மகிழ்ந்துவந்த அவருக்குத் திடீரென்று நுரையீரல் வீங்கி இளைப்பு வியாதி உண்டாகிவிட்டது. அவர், படுக்கையில் படுத்துவிட்டார்; படுத்தும் தமக்குச் சாவு வருமென்று நினைக்கவேயில்லை; இரண்டு மூன்று

தினங்களுக்குள் சௌக்கியமாகி எழுந்துவிடலாமென்று நினைத்திருந்தார். அவர் எண்ணம் பலிக்கவில்லை. நாள் எட்டாகியும் ஆசாமி எழுந்திருக்க வில்லை. நாளாக நாளாக அவர் பிழைப்பது அரிதாய் முடிந்துவிட்டது; எலும் புந் தோலுமாய்விட்டார்; அவருக்கு நாவும் ஒடுங்கிப்போயிற்று. அதுவரை அவர், புதைத்துவைத்த தங்க உருண்டையை எவருக்கும் வெளிப்படுத் தாமலே யிருந்தார். அதன்மேல், அவருக்கே, தாம் பிழைப்பது முடியாதென் பது விளங்கிவிட்டது. அப்போதுதான், அவர், அதைத் தம் மனைவிக்காவது சொல்லலாமென்று நினைத்தார். அத்தருணத்தில் அவருடைய மனைவி, கால் மாட்டில் கண்கலக்கத்துடன் உட்கார்ந்திருந்தாள். அவர், அவளிடத்தில், தங்க உருண்டை புதைத்துவைத்த இடத்தைச் சொல்லுதற்கு வாயைத் திறந்து பார்த்தார். கொஞ்சங்கூடப் பேசமுடியவில்லை. அவ்வாறு அவர், பேச முய ன்று சிரமப்பட்டதால் அவருக்கு விக்கலெடுத்துக்கொண்டது.

விக்கலுண்டாகவே அவர், மெத்தவுந் துக்கப்பட்டு, "ஐயோ! நாம் அரும் பாடுபட்டுச் சேர்த்துவைத்த தங்கக்கட்டி யாருக்குமுதவாமற் போய்விடுமே; அதை நாம், மனைவிக்குச் சொல்லலாமென்றாலும் வாய்வரவில்லையே; முந் தியே சொல்லாமற் போய்விட்டோமே; இப்போது கையினாலாவது அதற்கு ஜாடைகாட்டலாம்" என்று நினைத்து, மனைவியின் முகத்தை மனக்கலக்கத் தோடு பார்த்து, விளாங்காயளவு தங்கமிருப்பதற் கறிகுறியாக ஒற்றைக் கைவிரல் களைக் குவித்துத் தங்கம் புதைக்கப்பட்ட இடத்திற்கு நேரே அந்தக் கையை நீட்டிக் காட்டினார். அந்த அடையாளத்தால் அவளுக்குத் தன் கணவனின் மனக்குறிப்பு விளங்கவேயில்லை; அவர், விளாங்காய் தின்ன விருப்பங்கொண்டு அதைக் கைச் சைகையால் கேட்கிறார் என்று அவள் நினைத்து, அது, விக்கலுண் டாயிருக்குஞ் சமயத்தில் மேலும் கெடுதியை உண்டாக்கிவிடக்கூடியதாதலின், அதனை அவருக்குக் கொடுக்கப் பயந்து, அவர் முகத்தை நோக்கி, "ஐயோ! விக்கலுக்கு விளாங்காயைத் தின்னலாமா? அது தொண்டையை அடைத்துக் கொண்டு உம்மைக் கொன்றுவிடுமே" என்று இரக்கத்தோடு கூறினாள். அதைக் கேட்டு அவர், தம் மனைவி, மனக்குறிப்பை அறியவில்லையென்று கோபித்துக் கையை ஓங்கித் தரையில் அறைந்து மீண்டும் தங்கவுருண்டை யிருந்தபக்கம் கையை நீட்டினார். அந்தப் பக்கம் கொல்லைப்புறமாதலாலும், அங்கே ஒரு விளாமரம் நின்றதாலும் விளாங்காய் கொண்டுவரச்சொல்லி அவர் அந்த மரத் தையே காட்டுகிறாரென்று அவள் நினைத்து மேலும், "ஐயோ! விளாங்காயை விரும்பவேண்டாம்; வேண்டாம்" என்று கதறினாள். அவர், "ஐயோ! நம் முடைய தங்கக்கட்டி எவருக்கு முதவாமற் போகின்றதே!" என்று ஆத்திரங் கொண்டு பல்லைக் கடித்துக்கொண்டு உயிரை விட்டுவிட்டார்.

அவரால் புதைக்கப்பட்ட தங்கக்கட்டி பூமிக்குள்ளேயே இருந்து பூதத் தின் காவலுக்குட்பட்டது. அவர் உலகத்தில் ஒரு சுகத்தையுமடையாமல் பாவத்தையும், பழியையும் மூட்டை கட்டிக்கொண்டு நரகம்புகுந்து துன்பத் தையடைந்தார். அறத்தை மறந்ததால் அவர் அடைந்த பலன் இதுவே.

(தொடரும்.) செம்பூர். வீ-ஆறுமுகஞ்சேர்வை.

## "பாடை யேறினும் ஏடு கைவிடேல்."

தேனினுமினிய தீந்தமிழ்நாட்டுச் சான்றோர்கள் திருவாய்மலர்ந்தருளிய முதுமொழிகளுள் இஃதுமொன்றாகும். அறிவிற்சிறந்த நம்முன்னோர்களின் நல்லுரைகளைப்போற்றிப் புகழாதார் யார்? அவர்கள் திருவாயினின்றெழுந்த வார்த்தைகளெல்லாம் நமக்கு நீதியைப் போதிக்கக்கூடியவைகளே. அவைகளிலொன்றாகிய இப்பழமொழியும் பெரியோர்களின் நுண்ணறிவை விளக்கும் ஆற்றலுடைத்து.

"பாடை யேறினும் ஏடு கைவிடேல்" என்பதற்கு "இம்மகிதலத்திற் பிறப்பெய்திய நீ படிக்கும் பருவத்திலிருந்து இறக்கும் வரையில் ஏட்டைக் கைவிடாமல் அதிலுள்ள பொருள்களை யாராய்ந்துகொண்டிரு" என்று வெளிப்படையாகப் பொருள் கோடலாம்.

இப்பழமொழியின் மூன்றாவது சொல்லாகிய "ஏடு" என்ற பதத்தைப் பற்றிக் கவனிக்கும்போது இஃது தொன்மையில் ஏற்பட்டதாக இருக்கவேண்டும். இப்போது கையாளப்பட்டுவரும் கடுதாசியானது பதினெட்டாம் நூற்றாண்டில், அதாவது கி. பி. 1789 ம் ஆண்டுக்குப் பின்னால் கண்டுபிடிக்கப்பட்டதெனப் பிராஞ்சு ஆராய்ச்சிக்காரர்கள் குறித்துள்ளார்கள். ஆகவே "ஏடு" என்ற பதம் பண்டைக்காலத்திலிருந்து நமது முன்னோர்கள் காகிதம் செய்யப்படாதிருந்ததற்கு முன்னால் பனையோலைகளில் எழுத்தாணிகொண்டு எழுதிவந்துள்ள ஏட்டையே குறிக்கும். சிலர் "ஏடு" என்பது இப்பொழுது வழங்கும் காகிதத்திற்கே என்று சாற்ற முன்வரலாம். ஆயினும் மற்றொரு பழமொழியானது "ஏடும் எழுத்தாணியும்" என்று வழங்கப்படுவதனாலும், எழுத்தாணிகொண்டு காகிதமாகிய ஏட்டில் எழுதுவதென்பது முடியாத காரியமாதலானும் "ஏடு" என்பதற்குப் பனையோலையாலாகிய ஏடு என்றே பொருள்கொள்ளல் வேண்டும். ஆகவே இப்பழமொழியானது மிகப் பழமையுடைத்தென்றேற்படுகின்றது.

மக்கள் எனும் பெயருக்குரியராய் மானிடசட்டையைப் போர்த்துள்ள நாமனைவரும் அவரவர் செய்துள்ள கர்மத்துக்கீடாய்ப் பிறக்கின்றோம். ஆனால், அந்தந்த மதத்தவர்க்குள்ளும், பலதிறப்பட்ட மொழிகளைப் பேசும் பழக்கத்தால் நாம் மாறி வருகின்றோம். அன்றியும் நமது அம்மை யப்பர் நம்மை யெம்மொழியில் பயிற்றுகின்றார்களோ, பயிலவிடுகின்றார்களோ அதனிடத்திலேயே நாமும் பழகிவருகின்றோம். ஆனால் ஒவ்வொருவரும் எந்தெந்தமொழியில் பேச, வாசிக்க, எழுதப் பழக்கம் பெறுகின்றோமோ, அதனிடத்தே முன்னேற்றமடைந்து வருகின்றோம். எனினுஞ் சிலர், தங்களுக்குரியவரையில் வாசித்து முடிந்ததும் வேறு தொழில் செய்யவேண்டியவர்களாக இருக்கின்றனர். எவருங் கல்விக்கழகத்திலிருக்கும்வரையில் தாம் பயிலாநிற்குங் கல்வியிலேயே நினைவாக இருப்பர். கல்விக்கழகத்தினின்றும் படிப்பதைவிட்டு நீங்கி வேறு தொழிலிற் புகுந்தவுடன் அத்தொழிற் சம்பந்தமான நூதன செயல்களைக் கற்கவுஞ் செய்யவும் வேண்டியிருப்பதால் கொஞ்

சங் கொஞ்சமாகத் தாம் இளமையில் கல்விக்கழகத்தி லரும்பாடுபட்டு அரிதிற் றேடிய பெருங்கல்விப்பொருளை மறதியில் விட்டுவிடுகின்றனர். அதனால் எவரும் இளமையில் அநேக நூல்களை வாசித்திருப்பினும், அவைகளை மறந்துவிடுவதால் அந் நூற்களை வாசிக்காதவர்களைப்போன்றே விளங்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். அறிவைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தோண்டிவருங் கல்வியாகிய நன்னூல்களை யிடைவிடாது கற்போர்களே அடிக்கடி தாங்கற்ற நூற்பொருளை மறக்கவுந் திரும்பத் திரும்பக் கற்றவைகளையே கற்கவும் வேண்டியவர்களாக இருக்கின்றனர். அங்ஙனம் அவைகளைக் கற்றுவரும் பொழுதுஞ் சமயத்திற்கு நினைவில் வாராதொழிவன பல. அடிக்கடி நூற்களை வாசிப்போர்களின் கதியே இங்ஙனமாக, நூற்களையேத்திரும்பப்பாராதவர்களின் கதியென்னும் ?

மேலும், நாம் இவ்வையத்திலடையவேண்டிய பயன்களாகிய அறம், பொருள், இன்பங்களும், மறுமைப்பயனாகிய வீடும் பெறவேண்டுமெனில், அவைகளைத் தரும் வல்லமையுள்ள கல்விப்பொருளை முதன் முதலிற் பெற வேண்டுவது மின்றியமையாததாகும். இதை "அறம், பொருளின்பம் வீடடைத னூற்பயனே" என்ற நன்னூலாலும், "அறம் பொருளின்பம் வீடும் பயக்கும்" என்ற மற்றோர் நூலின் கருத்தானுந் தெளியலாம்.

> "இனியே தெனக்குனருள் வருமோ வெனக்கருதி
> யேங்குதே நெஞ்ச மையோ !
> இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
> றெண்ணவோ திட மில்லையே !
> அனியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
> மந்தகற் காளாகவோ
> வாடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டது
> மவலமாய்ப் போத னன்றோ"

என்னுந் தாயுமான சுவாமிகளின் திருவாக்குக்கு மாறுதலில்லாமல் நினையாத போது வந்து உயிரைக் கௌவும் அந்தகற் காளாகும் பெற்றித்தாய தன்மையை யறிந்திருந்தும், ஆன்மா கடைத்தேறும் வழியைத் தேடுவதற்கு இன்றியமையாததும், மிகவுந் துன்புற்றுக் கற்றதுமாகிய கல்வியைப் பாழிலே விட்டுவிடலாமா ?

உலகமுங் கற்றறிந்த நுண்ணுணர்வுடையோர்களை யோர் வகையினராகவும், அஃதில்லாதவர்களை மற்றோர் வகையினராகவும் மதிக்கின்றது.

அநேக நூல்களை யாராய்ச்சி முகத்தாற் கண்டு, அவைகளிற் கூறியவண்ணம் நடந்து அவைகளால் எய்தும் பெரும்பயனைத் துய்க்கும் பெரியோர்கள் என்றும் "ஏடுங் கையுமாக" நிலவுவதை நாம் இன்றுங் கிராமங்களிலும் மற்றிடங்களிலுங் காண்கின்றோம். சிலர் புத்தகங்களைத் தொடுவதற்கே மனமற்றவர்களாய்த் தேகமே ஆத்மா, போகமே மோக்ஷம் என்பதற்கொப்ப, உண்

பதும், உறங்குவதுமாக நிலவிக் கிடைத்தற்கரிய மனிதப்பிறவியைப் பெற்றும், அதனாலடையும் பயனையடைதற் கேதுவாகிய நன்னெறிகளைத் தேடாமற் றங்கள் வாணாளை வீணாளாக்குகின்றனர். அந்தோ! பரிதாபம்.

நம் கர விரல்களில் நாம் அழகிய வைரம், இரத்தினம், கெம்பு முதலியவைகளைப் பதித்த பவுன் மோதிரங்களைப் போட்டுக்கொண்டு அழகு பார்க்கின்றோம்; அல்லது பார்க்கவிரும்புகின்றோம்; அறிஞர்கள் தங்கள் கைகளுக்கு அணியாகக்கொண் டிருக்கும் நூல்களாகிய நகைகளைப் பார்க்கிலும் மேற்கூறிய மோதிரம் முதலியவைகளெல்லாம் மதிப்புடையனவாகுமோ? "கல்வி நலனே கலனல்லால், கற்றோர்க்கு மற்றோர் அணிகலம்" வேண்டுமோ? அதுவு மன்றிப் பெரியோர்களும் சுருக்கமாக "புத்தகம் ஹஸ்தபூடணம்" என்றுங் கூறிப்போந்தனர். அதுவுந்தவிர "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்ற யவை" என்றார் நாயனாரும்.

நமக்கு உயிர்த்தோழர்களாக விருக்கும் அன்பர்கள் சிலசமயம் மனம் வேறுபட்டுப் பிரிதல் கூடும்; அல்லது வேற்றூர்கட்குப் பல காரணங்களை முன்னிட்டுப் போய் நம்மைப் பிரிந்திருக்கவுங் கூடும். ஆனால் நூல்களாகிற நந்துணைவர்களை நாம் எப்போதும் நம்மைவிட்டுப் பிரியாதிருக்கும் வண்ணம் செய்துகொள்ளலாம். நமக்குவேண்டிய புத்திமதிகளை யன்பர்கள் நமக்குச் சமயத்திற்கூறி நம்மைத் தேற்றுவதுபோன்றே நூல்களும் நமக்கு அளவற்றனவும், நந்தோழர்கள் நமக்குக் கூறமுடியாதனவுமாகிய பெருநீதிகளைப் போதிக்கு மாற்றல் மிக்கன. நம் நேயர்கள் ஒருதடவை சாற்றிய நீதியையே மறுபடியும் போதிக்கவேண்டுமெனில் மறந்துவிடவுங்கூடும். ஆனால் நூல்களாகிற கூட்டாளிகள் ஒருதடவையில் நமக்குக் கற்பித்த நீதிகளைத் திரும்ப எவ்வளவு தடவைகள் வேண்டுமெனினும் அவைகளையே நினைவூட்டும் வல்லமையுடையன. பிறநேயர்களைப் பார்க்கிலும் நன்னூல்கள் நமக்குப் பொருத்தமான தோழர்களாகவும், நஞ்சிற்றுயிர்க்குற்ற துணையாகவும் விளங்குகின்றன வெனில் அது மிகையாமோ! அவைகள் விலைமதிப்பற்ற மணிகளுக்கும் மேலான தன்மைத்தாய பல நீதிகளையும், பிரதினான்றும் ஒவ்வொருவருங் கடைப்பிடித்தொழுக வேண்டிய நெறிகளையும், வைத்தியத்திற் கேதுவான பலமுறைகளையும், ஜோதிடத்திற் கின்றியமையாத பல கணக்குகளையும், மனோற்சாகத்திற்கு வேண்டிய பல காவியங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும், போர் புரிவதற்குத் தக்க வீரம் புகட்டும் பல வீரர்களின் சரித்திரங்களையும், மனிதப்பிறப்பாற் பெறும்பயனை வெளிப்படுத்தாநிற்குஞ் சித்தாந்த வேதாந்த நூற்களையும், மொழிவளர்ச்சி பெறுவதற் கேற்ற திவாகரம், நிகண்டு முதலியவைகளையும், கட்டுரைகள் வரையவும், நூல் ஏற்படுத்தவும், பா புனையவும் அவசியமாகிய பல இலக்கண நூல்களையும் நமக்கு அவைகள் அறிமுகமாக்கி வைத்து வேண்டுவன கொண்டு நம்மைக் கடைத்தேறச் செய்கின்றன.

ஆகவே, கல்வியென்பதோர் பரந்த கடலாகலானும், அதைக் கற்கும் நாமோ மிகச் சிறுமை யுடையோராகலானும், அக்கல்விக் கரையைக் காணும் வயது நமக்கின்மையானும், நமது காலம் முழுதுங் கற்பினுங் கல்வியின் பல

பங்குகளில் ஓர் பங்கேனும் பெருதவர்களாவோ மாகையினலும், நமக்குள் அற்ப ஆயுளைப் பங்கிட்டுக்கொள்ளப் பசி, பிணி, மூப்பு, துன்பம் முதலிய வைகளும் நம்முடன் இணைந்துள்ளனவாதலாலும், நாம் என்றும் எப்போதும் நூற்களை யிடைவிடாது கைக்கொண்டு ஆராய்ந்து வரவேண்டுவது நலமான செய்கையாகும்.

ஆகலின் அன்பர்களே! பின்றையே நின்றது கூற்றமென்றெண்ணி நாம் ஒரு விநாடியையும் வீண்போக்காமல் நன்னூல்களை யாராய்ந்து அவ்வாராய்ச்சியிற் காண்பதுபோல் ஒழுகி அவற்றாலாம் பயனைத் துய்க்க முற்படுவோமாக. மு. மாணிக்க நாயகர், திருப்புவனை, புதுவை.

---

## அறிஞரின் அமுதமொழிகள்.

1. **There is no happiness without action** *Disraeli.*
தொழிலின்றியிருப்பதில் சந்தோஷமே கிடையாது (டிஸ்ரேலி)

2. **The great end of life is not knowledge but action** *Huxley.*
நம் வாழ்க்கைக்கு முக்கியமான ஆதாரம் செய்கையேயன்றிப் படிப் பல்ல (ஹக்ஸ்லி)

3. **There is no education like adversity** *Disraeli.*
கஷ்டகாலத்தைப்போல் (அறிவையுண்டாக்கும்) படிப்பு வேறெதுவு மில்லை (டிஸ்ரேலி)

4. **Ambition has no rest** *Lytton.*
பேராசைக்கு ஒய்வேகிடையாது (லிட்டன்)

5. **Anger is a short madness** *Horace.*
கோபம் கொஞ்சநேரமுள்ள பைத்தியமாம் (ஹொரேஸ்)

6. **Preferment goes by letter and affection** *W. Shakespeare.*
உத்தியோகத்தில் உன்னதபதவியடைவது, கௌரவமான பெரியோரின் வாக்கு சகாயத்தினலும் தயையினலுமே (வி.ஷேக்ஸ்பியர்)

7. **Avarice is always poor** *Johnson.*
பேராசை தீராத் தரித்திரம் (ஜான்ஸன்)

8. **Beauty is truth, truth beauty** *Keats.*
அழகே உண்மை, உண்மையே அழகு (கீட்ஸ்)

9. **A hard beginning maketh a good ending** *Heywood.*
தொடக்கத்தில் துன்பம் முடிவில் இன்பம் (ஹேவுட்)

10. **There is healing in the bitter cup** *Southey.*
கசப்பில் (சுகந்தரும்) குணம் உண்டு (சதே)

11. **Full many a gem of purest ray serene**
**The dark unfathom'd caves of ocean bear** *Thomas Gray.*
சுத்தமும், பிரகாசமும் பொருந்திய அநேக இரத்தினங்கள் ஆழம் பொருந்திய சமுத்திரத்தில் மறைந்துகிடக்கின்றன. (அவற்றைப் போல் மகிமையுள்ள பெரியார் பெயரும் மனிதர் கூட்டத்தில் அவர்களின் சொரூபந் தெரியாது மறைந்திருக்கின்றது) (தாமஸ் கிரே)

12. **Who goeth a borrowing goeth a sorrowing** *Tusser.*
எவன் ஒருவன் கடன்படுகிருனே அவன் வருத்தத்துக் குள்ளாகிருன் (டஸ்ஸர்)

13. **Better is to bow than to break** *Heywood.*
எதிர்ப்பதைக்காட்டிலும் இணங்குவது நலம் (ஹேவுட்)

14. **The brave die never** *Bailey.*
பராக்கிரமமுள்ளவர்கள் இறப்பதேகிடையாது (பேய்லி)

15. **Childhood should begin with obedience** *Smiles.*
பாலியம் வணக்கத்துடன் ஆரம்பமாகவேண்டும் (அதாவது பாலியர்கள் வணக்கத்துடன் இருக்கவேண்டும்) (ஸ்மைல்ஸ்)

16. **He who is unmoved by tears has no heart** *Napoleon.*
பிறர் கண்ணீரைக்கண்டு இரங்காதவன் கடினசித்தமுடையவனுவான் (நேபோலியன்)

17. **Cleanliness is next to godliness** *J. Wesley.*
பரிசுத்தம் தெய்வபக்திக்கு அடுத்தபடியாம் (ஜெ. வெஸ்லி)

18. **Treason seldom dwells with courage** *Scott.*
இராஜதுரோகம் பராக்கிரமமுள்ளவர்களிடம் குடிகொள்வது அருமை (அதாவது வலிமையுள்ளவர்கள் அரசனை வஞ்சித்து அவனுக்குத் துரோகஞ்செய்யமாட்டார்கள்) (ஸ்காட்)

19. **Be true to your own convictions** *Channing.*
உன் குற்றத்தை நீ அறிந்துகொள் (சானிங்)

20. **Courage leads to heaven ; fear to death** *Seneca.*
தைரியம் சுவர்க்கத்திற்கு வழிகாட்டுகிறது
பயம் சாக வழிகாட்டுகிறது (சேனகா)

21. **Courage conquers all things** *Ovid.*
துணிகரம் எல்லாவற்றையும் வென்றுவிடுகிறது (ஆவிட்)

22. **The best cure for the body is to quiet the mind.** *Napoleon.*
கவலையற்ற மனமே சரீரத்திற்கு நல்ல மருந்து (நேபோலியன்)

23. **Cowards fear to die** *Raleigh.*
கோழைகள் சாக பயப்படுகிருர்கள் (ராலி)

24. **Confidence is the secret of strength** *Monod.*
மனவுறுதியே நமது வலிமைக்கு ஆதாரம் (மானுட்)

25. **Cowards die many times before their death** *W. Shakespeare.*
கோழைகள், தாம் இறப்பதற்குமுன் அனேகந் தடவைகள் இறக்கிருர்கள் (அதாவது அடிக்கடி நேரும் சிறு காரியங்களிலும் அஞ்சி இறந்தவர்போலாகிருர்கள்) (வி. ஷேக்ஸ்பியர்)

26. **Neither fear nor wish for your last day** *Martial.*
உன்னுடைய அந்தியநாளைப்பற்றிப் பயப்படவும்வேண்டாம்; அதைப் பற்றி எண்ணவும் வேண்டாம் (மார்ஷல்)

27. **Through danger safety comes through trouble rest** *Morston.*
அபாயம் பாதுகாப்பையும் கஷ்டம சுகத்தையும் தரும் (மார்ஸ்டன்)

(தொடரும்) ஒரு போதகர்.

# காங்கிரஸும் தேர்தலும்.

**காங்கிரஸ்** என்பது தேசநலத்திற்கான ஓர் பொது ஸ்தாபனம். இது முதல் முதலாக 1885-ம் வருஷத்தில் நிறுவப்பெற்றது. இதற்கு தேசபக்தருள் பிரதமரான தாதாபாய் நௌரோஜியே ஸ்தாபகர். பாரதநாட்டிலுள்ள பல்வேறு ஜாதிப்பிரிவையுடைய மக்களனைவரையும் ஒன்றுபடுத்தி நன்மைபுரியும் நோக்கத்துடனே இக்காங்கிரஸ் மஹாசபை ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவின் பலபாகங்களிலிருந்து தேசபக்தர்களும், அறிவாளிகளும் இக்காங்கிரஸ் கூட்டங்களுக்கு விஜயஞ்செய்து ஒன்றுபட்டுத் தம் அபிப்பிராயங்களைத் தாய்நாடு முன்னேற்றமடையும் வகையில் வெளியிட்டு உழைத்துவந்தனர். கருணையினிருப்பிடமான விக்டோரியா மஹாராணியாரவர்களும் இக்காங்கிரஸ் மஹாசபையின் ஸ்தாபனத்தை ஆதரித்தனர். இக் காங்கிரஸ் மஹாசபையை யாதரிக்க ஓர் கோபாலகிருஷ்ண கோகலேயும் தோன்றினர். பின்பு, இந்தியதிலகராம் பாலகங்காதர திலகரும் தம் வாழ்நாட்களை தேசசேவை புரிவதிலேயே செலவழித்துக் காங்கிரசின் தலைவராய் விளங்கினர். பிறகு, மோஹனதாஸ் என்பார் தம் தியாக மோஹனாஸ்திரத்தை காங்கிரசினிடத்து வீசி 'காந்தி' யாகிய சுயராஜ்ய வாழ்வின் வழியை நமக்குக் காட்டினர். இதன் பின்பு, வந்தார் ஒரு தேசதாஸர். அவர் தேசபந்துவாயும், சுதேச சித்தத்தை ரஞ்சிக்கக்கூடியவராயும் தேசபக்தர்களின்—பாரதமாதாவின் தாஸராக விளங்கினர். சென்றுபோன நாட்களில் நௌரோஜி, கோகலே, திலகர், காந்தி முதலானவர்கள் காங்கிரஸ் மஹாசபையில் விடுதலைகாரணமாகச் செய்துவைத்த சீர்திருத்தங்களையும் தீர்மானங்களையும் அவற்றின் முடிவையும் கண்ட இவர், புதியதோர் சுதந்திரவழியைப் புகட்டினர் நமக்கு! நாட்டின் நலத்தின்பொருட்டுத் துறந்தார் இன்பவாழ்வை. இந்தியா சட்டசபையிலும், மாகாண சட்டசபைகளிலும் நன்மை தீமைகளை ஓர்ந்தறியாது தலையாட்டும் தம்பிரான்களைத் தேர்தலில் பின்னடையச்செய்து, காங்கிரஸ் வாதிகளைச் சட்டசபைகளுக்குச் செல்லுமாறு ஊக்கி நாட்டின் நலத்தைப் பெருக்க வேண்டுமென்பதே யிப்பெரியார் கொள்கை. இவருடைய கொள்கையை காங்கிரஸ் மஹாசபை ஆதரித்தது. அதற்கிணங்க 1923-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் பலர் காங்கிரஸ் சார்பாகச் சட்டசபைகளுக்கு அபேக்ஷகர்களாக நின்று ஜயம்பெற்றனர். இக்கொள்கையின் அன்னையான அந்த தாஸர் விரைந்து விண்ணுலகெய்தினர்.

இஃதிவ்வாறாக, நம் தென்னாட்டில் சமீபத்தில் நடந்த தேர்தலைச் சற்று கவனிப்போம். சென்ற மாதாரம்பத்தில் நமது மாகாணமெங்கும் 'ஓட்' என்ற வார்த்தை உலாவிக்கொண்டிருந்தது. 'ஓட்' என்பதன் பொருளைப் படியாதார் முற்று மறியார்; அபேக்ஷகர்களின் வருகையைக் கண்டு பயந்தோடி ஒளிந்துகொண்டனர் பல கிராமவாசிகள். அரைகுறைப் படிப்பாளிகள் "இவர்கள்

வரி வாயிதா குறைத்தார்களா? வீட்டுவாசலில் சாக்கடை கட்டினார்களா? பிழைப்பில்லை'' என்று பலவாருகப் பிதற்றவாரம்பித்தனர். பலர் அபேக்ஷகர்களைக் கௌரவமாகக் கொள்ளையடிக்கும் சமயமிதுவே யெனக் கண்டு பணங் கண்ட விடங்களில் பாயவாரம்பித்தனர். அநேகர் தீபாவளிச் செலவிற்குத் தேர்தலையே எதிர்பார்த்திருந்தனர். சிலர் பல அபேக்ஷகர்களிடத்திலும் பணத்தைப் பறித்துக்கொண்டு ஒருவரைத்தவிர மற்றவரை மோசம்செய்தனர். வெகுபேர் பணப்பேய் பிடித்துத் தேர்தலுக்கு முதல்நாளிரவு நித்திரையின்றி விழித்திருந்தனர். சிலர் தேர்தலன்று நடுப்பகல் வரையில் பணம் வருமென்று நம்பி அதைக் கொடுப்பார் வருவார் வருவாரென்று வழிபார்த்து வயிறெரிந்து பின்பு "இராமன் ஆண்டாலென்ன இராவணன் வாழ்ந்தாலென்ன'' வென்றெண்ணித் தம் வாக்குக்களைக் கொடாமலே போய்விட்டனர். பொதுவாகக் கவனிப்பின் 'தேர்தல்காலமே வரும்படிகாலம்' என்பது பலருடைய சித்தாந்தம். உண்மையான சேவையையும் தேசபக்தியையுமுடையவர்கள் பல விடங்களில் மேற்கூறிய பலருடைய நம்பிக்கைக்குத் தம் கொள்கையினிமித்தம் துரோஹம் செய்ய நேர்ந்தது. அன்பர்களே! நவீன நடையுடையபாவனைகளால் நாகரீகர்களான இவர்கள் தேர்தல்காலத்தில் அநாகரீகர்களானது வியக்கத்தக்கதன்றோ!

சகோதர சகோதரிகளே! நம் வீடும் நாடும் நமக்கொன்றே. வீடு நாம் வாழும் சிறு இல்லம். நாடோ நம் சகோதரர்கள் வாழும் பெரும் வீடு. ஆகவே, நம் நாடு நலமடைந்தால்தான் நம் வீட்டில் சீலமும் பெருகும். வாக்குக்கேட்கும் அபேக்ஷகர்களை நா கூசாமல் பணங்கேட்பது எத்துணை அறியாமை? காங்கிரஸ் மஹாசபை போன்ற தீக்ஷண்யக் கொள்கை யுடையவர்களுக்கு நாம் நம்முடைய நலத்தைக்கருதி உடலாலும் பொருளாலும் ஆவியாலும் ஒன்று கூடிப் பாடுபட்டு உதவிபுரியவேண்டியிருக்க, அபேக்ஷகர்களிடமிருந்து பிரதிப்பிரயோஜனம் எதிர்பார்ப்பது பொருத்தமான செய்கையாகுமா? இதுவரையிலும் உலகிற்றோன்றியுள்ள அஹராதிகளில் ஒன்றிலேனும் 'ஓட்' என்பதற்குப் 'பணம் பெறுதல்' என்ற பொருள் காணப்படவில்லையே! இதனையுணர்ந்து நாம் இனியேனும் தேர்தல்காலத்தில் பணவரும்படியை எதிர்பாராது, காங்கிரஸ் மஹாசபையின் தீர்மானங்களை ஆதரித்து, தேசநலத்தின்பொருட்டு உண்மையாகப் பாடுபட்டுழைக்கும் உண்மைத் தேசாபிமானிகளைத் தேர்ந்தெடுக்கும் சித்தாந்தத்தைக் கொள்ளவேண்டும்.

இப்போது தேர்தல் முடிவடைந்தது. காங்கிரஸ் அபேக்ஷகர்களே பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; தோல்வியுற்ற அபேக்ஷகர் வீடுகளில் எக்கம் அதிகமாயிற்று; அவன் ஓட் போடவில்லை; இவன் ஏமாற்றினான்; இவனை விட்டேனா! அவனைத் தொட்டேனா என்ற வீறுப்புமொழிகள் கிளம்பலாயின. ஜெயம் பெற்றவர்களோ 'ஜெயம்' என்ற வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலே வெற்றிலைபாக்கு கற்கண்டு வழங்க வாரம்பித்தனர். ஆனால் பொது ஜனங்களுக்கு 'தேசவிடுதலை' யான கற்கண்டை விட இக்கற்கண்டெல்லாம் சுவைமிகுவனவல்ல.

இவர்கள் இப்பொழுது வழங்கும் சர்க்கரை நிற்க, இனி வழங்கவேண்

டிய சர்க்கரை யாதென விவரிப்போம்: இனி யிவர்கள் "நாம் சட்டசபையில் அமர்வோம் - நாமும் சட்டசபை அங்கத்தினர் என்ற கௌரவம் - அந்தஸ்து - மதிப்பு - பெருமையை அடைந்தோம் - நமக்கு முன் அவன் தோல்வி யடைந் தான் - என்ற சுவையற்ற எண்ணங்களுக்கு இடந்தரலாகாது. ஜாதி மத பேதம் எவ்விதம் காங்கிரஸ் மஹாசபையான பொதுஸ்தாபனத்திற் கில்லேயோ அவ்வாறே இவர்களுக்கும் அவ்வித பேதமில்லா தொழியவேண்டும்.

சட்டசபையில் வாதித்துப் பொதுமக்களின் நன்மைக்குப் பாடுபட வேண்டும்; மத விஷயத்திலும், கல்வி விஷயத்திலும், பொதுவிலும் இன்றி யமையாத பல சீர்திருத்தங்களைச் செய்தல்வேண்டும்; சமய வேறுபாடாகிய களை, அன்பாகிய நீரால் வளர்க்கப்படும் நமது தேசநலமாகும் பயிருக்குத் தீங்கு விளைவிக்காது பாதுகாக்கவேண்டும். ஜயம்பெற்ற அபேக்ஷகர்கள் தேர்தல் பெற்றபின் வாக்காளர்களை ஏமாற்ருது – சுயநலப் பிரியராகாது - தேசசேவையே மேற்கொண்டு நின்ருல் மட்டுமே அவர்கள் - தம்நாட்டிற்கும் - கடவுளுக்கும் - பொதுஜனங்களுக்கும் தம் கடமைகளைச் செய்பவராவர்.

முடிவாக இச்சட்டசபை அங்கத்தினர்களுக்கும் வாக்காளர்களான பொது ஜனங்களுக்கும் இன்றியமையாத தொன்றுண்டு. அதுதான் ஒற்றுமை என்ற உயர்பொருள். சட்டசபை அங்கத்தினர்களும் தம்முள் ஒன்றுபட்டு நமக்கு நன்மை புரியவேண்டும்; பொதுமக்களாகிய நாமும் ஒற்றுமையாக அவர்களுக்குச் சாதகமான வழிகளில் உதவிபுரியவேண்டும். இதைத்தான் "பரஸ்பர ஒத்துழைப்பு" என்ருர் மஹாத்மா;

ஒன்று பட்டாலுண்டு வாழ்வு
ஒற்றுமை குன்றி லனைவர்க்குந் தாழ்வு

என்றிசைத்தார் வரகவியான பாரதியாரும். தமிழ்நாட்டுமக்க ளிவற்றை யுணர்ந்து வாழ்க! தேசநலம் பெருக! இறைவனடி பணிவாம்.

S. V. வரதராஜய்யங்கார், உறையூர், திருச்சி.

# ஆரம்ப ஆசிரியர்பகுதி.

## ஆசிரியர்களை அடிக்கடி மாற்றுவதால் உண்டாகும் கெடுதி.

அன்பின்மிக்கீர்!

சென்ற சில வருடங்களாக ஆசிரியத்தொழிலில் அமர்ந்துள்ள யான் என் அநுபோகத்துக்கு எட்டியவரை ஆசிரியர்களை ஓரிடத்திலிருந்து பிறி தோரிடத்திற்கு மாற்றுவதால் உண்டாகும் கேடுகள் பலவற்றைக் கண்ணாரக் கண்டு தங்கள் பத்திரிகை வாயிலாக அறிக்கை செயதேனும் அக்குறை நீங்கு வதற்கான வழியைத்தேட உளந்துணிந்தேன். பெரியார் பிழை பொறுப் பாராக.

1. மிக்க பொருள் வருவாயும், பலவகைச் சௌகரியங்களுமமைந்த ஓர் உத்தியோகஸ்தரே ஓரிடத்திரிலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றப்பட்டால் தாங்கள் படும் கஷ்டநஷ்டங்களைக் கணக்கிலடங்காதனவாய்ச் சொல்லி முறையிடுகின்றனரெனின், அரைவயிற்றுக் கஞ்சிக்கும் பற்றாத பொருள் வருவாயுடைய ஆரம்ப ஆசிரியர்களை அடிக்கடி வருடத்தில் இரண்டு மூன்று இடங்களுக்கு மாற்றினால் அவர்கள் எத்தகைய பரிதாப நிலையை யடைவார்க ளென்பதை அறிஞர்கள் சிறிது சிந்திப்பின் உண்மை புலனாம்.

2. ஒரு பாடசாலையில் குற்றமின்றி வேலைபுரியும் ஆசிரியர் ஒருவரை மற்றொருவருடைய சௌகரியத்தின் பொருட்டோ அல்லது வேறு எக் காரணம் பற்றியோ வேறிடம் மாற்ற நேரும்போழுது அந்த ஆசிரியர்கள் அவ்வதந்தி தங்கள் காதுக் கெட்டிய காலமுதல் தாங்கள் வேலை செய்யும் பாடசாலைகளில் ஊக்கம் குன்றி விடுகிறார்கள். "நாம் ஏன் வீண் கஷ்டப்பட வேண்டும்; நம்மைத்தான் வேறிடம் மாற்றி விட்டனரே" என்று எண்ணி, பாடசாலைக்கு ஏனோ தானோ வென்றுபோய், வேறிடம் போகவேண்டிய நாட்களை எண்ணிக்கை செய்துகொண்டு உத்தரவை எதிர்பார்த்தவராய் வீண்காலம்போக்குவதுடன், பதிலாக வருவோரின் நோக்கம் நிறைவேறாது போக எத்தகைய வழிகளைச் செய்யலாமென்றெண்ணி எண்ணிப் பெருங் கவலைக்குள்ளாகி வருந்துகின்றனர்.

3. ஆசிரியர்கள் மாணவர்களின் மனநிலைமையை அறிந்து கற்பிக்க வேண்டியவராவர். அஃதேபோல் மாணவர்களும் ஆசிரியர்களின் நோக்கம் எவ்வாறென்பதை யுணர்ந்து நடந்துகொள்ளவேண்டியவ ராகிறார்கள். ஆதலின், ஒரு ஆசிரியர் புதிதாய் ஒரு பாடசாலைக்கு வருவாரெனின் அவர் மேலே கண்ட விஷயங்களைக் கவனித்துப் பிள்ளைகளுடன் பழகிப் பாடசாலையை ஒழுங்காய் நடைபெறச் செய்வதற்குக் குறைந்தது மூன்று மாதங்களேனும் வேண்டும். அவ்வாறு வருடத்தில் மூன்று நான்கு உபாத்தியாயர் ஒரு வகுப்புக்குப் புதிது புதிதாய் வரநேரின் அப்பாடசாலை மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களிடமிருந்து எவ்வகையான பயனும் பெற வழியின்றிப் போவதுடன் ஆசிரியர்களும் தங்கள் திறமையை, ஓரிடத்தும் முற்றும் பெறச்செய்து காட்டவழியின்றி வருஷாந்தரப் பரீக்ஷையில் கல்வி இலாகா அதிகாரிகளின் குறை கூறத்தக்க குறிப்புகளுக்கு இலக்காய் நிற்க நேரிடுகின்றது.

4. ஒருவர் மாற்றப்பட்டு வேறோரிடத்திற்குப் போகும்போது அவர் தம்முடைய பிரயாணத்திற்குரிய சௌகரியங்களைச் செய்துகொள்ளக் குறைந் தது ஒருவார அவகாசமேனும் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அக் காலத்தில் சில பாடசாலைகளில் சில வகுப்புக்களில் மாணவர்கள் ஆசிரியரின் றித் தத்தளிப்பதுமல்லாமல் மாற்றப்பட்டவர் தமது பிரயாணமுதலிய செலவு களுக்காக வீண்பொருள் நஷ்டமும்பட நேரிடுகின்றது.

இன்னும் இதுபோன்ற கஷ்டங்கள் பல காணப்படுவதால் ஆசிரியர் தாங்கள் வேலை செய்யும் பாடசாலைகளில் சமாதானத்துடன் கொஞ்சகால

மேனும் தங்கியிருந்தால் ஆங்குள்ள சௌகரியத்தின்படிநடந்துகொள்ளலாகும். ஆதலின் கல்வி இலாகா அதிகாரிகளும் மற்றும் பாடசாலையின் தலைவர்கள் முதலியோரும் இவ்விஷயத்தை உற்றுநோக்கி, குறைந்தது மூன்று வருடங்களுக்கிடையில் ஆசிரியர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தகுந்த காரணமின்றி மாற்றுவது கூடாது என்ற நிபந்தனையைப் பிறப்பித்து யாவர்க்கும் நன்மையைச்செய்ய, பரம்பொருளைப் பிரார்த்திக்கிறேன்.

S. அருணாசலம் பிள்ளை, நான்குனேரி.

## வியாபாரப் பகுதி.

### தென்நாட்டு வர்த்தகம்.

(221-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, வெளிநாட்டு வியாபாரத்தைச் சற்று விளக்குவோம். காவிரிப்பூம் பட்டினம், முசிறி, தொண்டி, கொற்கை முதலியன தமிழ் நாட்டின் முக்கிய துறைமுகங்களாம். இத்துறைமுகங்கள் செயற்கையின்றி, இயற்கையாகவே மரக்கலங்கள் நிற்கக்கூடிய வகையில் அமைந்திருந்தன. அக்காலத்தில் நீராவியின் சக்தியால் செல்லக்கூடிய கப்பல்களில்லாததால் பெரும்பாலும் காற்றுச் சாதகமாக வீசும்போதே மரக்கலங்கள் வருவனவும் போவனவுமாயின. துறைமுகங்களிலிருந்து புறப்படும் கப்பல்களுக்கும், துறைமுகங்களை நாடிவரும் மரக்கலங்களுக்கும் வழிகாட்டுவதற்காக ஒவ்வொரு துறைமுகத்திலும் மூன்றுமைல் சுற்றளவிற்குப் பிரகாசிக்கக்கூடிய விளக்குகள் உயரத்தில் அமைக்கப்பெற்றிருந்தன. இவற்றைக் 'கலங்கரை விளக்கம்' என்றழைத்தனர் நம் பெரியார்.

துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதியாகும் பண்டங்களைக்கொண்ட பொதிகள் அரசனது முத்திரையிடப்பட்டு அடுக்கப்பட்டிருக்கும். இது,

"அளந்தறியாப் பல பண்டம் வரம்பறியாமை வந்தீண்டி, அருங்கடிப் பெருங்காப்பின் வலியுடை வல்லணங்கினோன், புலிபொறித்துப் புறம் போக்கி, மதி நிறைந்த மலிபண்டம், பொதிமூடை..." என்பதால் விளங்கும். இம்மூட்டைகளிற் பொறிக்கப்பட்டிருக்கும் முத்திரையைச் சரிபார்த்த பின்னரே அவை வெளியேற்ற அனுமதிக்கப்படும். வியாபார முறை இவ்வாறாக, இனி வியாபாரஞ்செய்த நாட்டினரையும் அவர்களுடைய வியாபாரப் பண்டங்களையும் சற்று ஆராய்வோம். "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும், காலின் வந்த கருங்கறிமூடையும், வடமலை பிறந்த மணியும் பொன்னும், குடமலை பிறந்த வாரமும் அகிலும், தென்கடல் முத்துங் குணகடற்றுகிரும்" என்பதால் பிறநாடுகளிலிருந்து குதிரைகளும், முத்து பொன் முதலியனவும், மிளகும் அகிலும், மெல்லிய ஆடைகளும் தமிழ் நாட்டிற்கு வியாபார நிமித்தம்

வந்திறங்கின வென்பது வெளிப்படை. அராபியர், ரோமர், கிரேக்கர் முதலானோர் தமிழ் நாட்டில் குதிரை வியாபாரஞ் செய்தனராம். இதற்கு "விழுமிய நாவாய் பெருநீரோச்சுநர், நனந்தலைத் தேயத்து நன்கலனுய்ம்மார், புணர்ந்துடன் கொணர்ந்த புரவி" என்று மதுரைக் காஞ்சியிற் கூறப்படுதலே ஆதாரம். மேற்கூறிய யவனர்கள் தமிழ்நாட்டின் துறைமுகங்களில் தனித் தனித் தெருக்களில் வசித்துவந்தனர். இவர்களிற் பலர் தமிழர்களுடைய போர்ச்சேவகர்களாகி யுத்தகாலங்களில் உதவிபுரிந்தனர். கி. பி. முதல்நூற்றாண் டில் பாண்டிநாட்டி லரசுபுரிந்த பாண்டியனும், அக்காலத்திய ரோமாபுரி மன்னனும் நட்புப்பூண்டு வியாபார உடன்படிக்கை செய்துகொண்டனர். வெளிநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த யவனர்களிற் பலர் தமிழருடைய நடையுடைபாவனை ஆலயவழிபாடுகளில் ஈடுபட்டுத் தமிழர்களுடன் கலந்து வசித்தனர். ரோமர்களும், கிரேக்கர்களும் தமிழ் நட்டாருடன் வியாபாரஞ் செய்தன ரென்பது நாவலர்கள் எழுதிவைத்த அபத்தக்களஞ்சிய மென்றும், இவை முற்றும் கட்டுக்கதை யென்றும் பலர் கூறித்திரிந்தனர். ஆனால், சில வருஷங்களுக்கு முன்பாக மதுரையிலும், மதுரையைச் சுற்றியுள்ள சிற்சில விடங்களிலும் பூமியை வெட்டியபோது ரோம, கிரேக்க நாணயங்களகப் பட்டதினின்றும் காவியங்களினுரை ஊர்ஜிதமாயிற்று.

கி. பி. 18-ம் ஆண்டில் இந்தியாவிற்குப் பாரமேற்றிச் செல்லும் 120 கப்பல்களைத் தாம் கண்டதாக ஸ்ட்ராபோ என்பார் கூறுகின்றனர். ப்ளினி என்பார் கி. பி. 78-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து ரோமாபுரிக்கு ஏற்று மதியான பண்டங்களின் மதிப்பு, 9,86,979 பவுன் என்றனர். இவை (1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழர்கள்) என்ற நூலினின்றும் விளக்கமாம்.

கொற்கையையடுத்த சில விடங்களில் மெல்லிய ஆடைகள் நெய்யப் பட்டுப் பிறநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன. தொண்டி, முசிறி முதலான இடங்களிலிருந்து ரோமாபுரி முதலான தேசங்களுக்கு மிளகு, வாசனைத்திர வியங்கள் அனுப்பப்பட்டன. மற்றும், கொற்கையில் முத்துக்கொழிக்கப் பட்டது. முத்துக்கொழிப்பதை மதுரைக் காஞ்சியில், "விளைந்து முதிர்ந்த விழுமுத்தி, னிலங்குவளை யிருஞ்சேரிக், கட்கொண்டிக்குப் பாக்கத்து, நற் கொற்கை" என்று நூலாசியர் எழுதிவைத்திருக்கின்றனர். இம்முத்துக் கொழித்தற்கு அடிமைகளும், கைதிகளுமே தூண்டப்பட்டனர்; இவர் நீரில் மூழ்கி முத்துக்களை வாரிக்கொண்டு வந்து, சுத்தப்படுத்திக் குவியல் குவிய லாகக் குவித்து வியாபாரஞ் செய்தனர். இவர்களுக்குப் பல வர்த்தகர்கள் உணவளித்து இவர்களை ஆதரித்து வந்தனர்.

இதனால், மேல்நாட்டாராரும், ரோமர்களும், கிரேக்கர்களும், வடநாட் டாரும் தென்னாட்டு வாணிபத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்தன ரென்பதும், தமிழ்நாடு வாணிபத்தில் எய்தற்கரிய சிறப்பை யடைந்திருந்ததென்பதும், தென்னாட்டில் நடைபெற்ற வாணிபச் சரக்குகளின் வகையும் விவரிக்கப் பட்டன.

உறந்தை-அரங்கநாதன்.

# கைத்தொழிற்பகுதி.

## தமிழுலகமும், கைத்தொழிலும்.

தமிழராகிய நாம், நம்தமிழ் நாட்டின் புராதனக் கைத்தொழில்களை ஆராய்ந்தறிய வேண்டுவது மிக்க அவசியம். தமிழகம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நாகரீகத்தில் சிறந்து உன்னத நிலையை யடைந்திருந்தது. தமிழ்நாட்டில் காவிய காலங்களில் கைதொழில் சிறந்த தெனக்கூற, அத்தமிழ்க் காவியங்களில் போதுமான ஆதாரங்களுண்டு. ஒருதேசம் சுபிக்ஷமாயிருக்க, செல்வங் கொழிக்க அவஸ்யமானது கைத்தொழிலொன்றே யானதாலும், ஜப்பான், இங்கிலாந்து, சைனு, அமரிக்கா முதலான மேல்நாட்டார் செல்வத்திலும் பராக்கிரமத்திலும் உயர்ந்து பல தேசங்களை யடக்கியாளும் தன்மையை அடைவதற்கு மூலகாரணமாயிருந்தது - இருப்பது கைத்தொழிலொன்றே யானதாலும், பண்டைக்காலத்திய தமிழர்களுடைய உன்னத நிலைக்குக் காரணம் அவர்களுடைய கைத்தொழிலாகவே யிருத்தல்வேண்டுமெனவும் நிர்ணயிக்கலாம். சிலப்பதிகாரத்தில்,

> "பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்
> கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்"

அதாவது: 'பட்டாலும், எலிகுதிரை முதலானவற்றின் மயிர்களாலும், பருத்தி நூலாலும் வெகு நயமான ஆடைகளை யுற்பத்திசெய்யும் பட்டுச்சாலியர் வதியும் இடங்களும்' என்று குறிப்பிடப்படுவதால் தமிழ்நாட்டின் கைத்தொழிற் சிறப்பை யூகிக்கலாம். மேலும் தமிழ்நூல்களில், கலவை அரைவைச் சந்தனம் அகில் உற்பத்தி செய்வோர், பவளம் பட்டு முத்து முதலியவற்றைச் சுத்தஞ்செய்து கோப்போர், நெல்லை அரிசியாக்குவோர், தென்னை சணலாகிய நாறுகளைக்கொண்டு கயிறுதிரிப்போர், வெண்கலம் செம்பு இரும்பு முதலான உலோகங்களால் பாத்திர விக்கிரஹவேலை செய்வோர், பொன் வெள்ளி முதலானவற்றால் ஆபரணங்களைச் செய்வோர், (தட்டார், கொல்லர், கன்னர்), மணமுள்ள மலர்களைச் சரங்களாகத் தொடுக்கும் பூக்கட்டிகள், நூலாலும் பட்டாலுமாகிய ஆடைகளைக் கத்தரித்து அங்கிகளாகத் தைக்கும் தையற்காரர்கள், வீணை சுவகதம் முதலான நரம்புகளாலாய வாத்தியங்களை யுற்பத்தி செய்யும் பாணர் முதலிய கைத்தொழிலுடையோரின் சிறப்புக்கள் பற்பல விடங்களில் காணப்படுகின்றன; வைத்தியர்கள் (மருத்துவர்) மூலிகைகளைக் கொண்டு மருந்தாக்கி வழங்குவதும் தமிழ்க் காவியங்களில் விரிக்கப் பட்டுள்ளது.

"தமிழ்நாட்டில் நெசவுசெய்யப்பட்ட பட்டாடைகளும், மெல்லிய வஸ்திரங்களும், சேலைகளும் வடக்கே பஞ்சாப் வரையிலும் சென்றுலாவின. சீகாகுளம், மசூலிப்பட்டினம், கோயம்புத்தூர், காக்கிநாடா, தஞ்சை

முதலான இடங்களில் பட்டுச்சாலியர் பெரிதும் வசித்து வந்தனர். மசூலிப் பட்டினத்திலும் காக்கிநாடாவிலும் வெகு நேர்த்தியான மண்ணாலான பதுமை கள் செய்யப்பட்டன. தமிழ்நாட்டில் நூல் நூற்றலான கைத்தொழில் ஜாதி வித்தியாச மன்னியில் அனுசரிக்கப்பட்டு வந்ததாலும், நெசவுத்தொழிலைப் பெரிதும் 'தேவாங்கர்' என்போரும், இசை வேளாளர்களுமே நடத்தி வந் தனர். மசூலிப்பட்டினம் போன்ற நகரங்களில் ஆட்டுரோமங்களைக் கத்தரித் துக் கம்பளங்கள் நெய்யப்பட்டு வந்தன. மதுரையிலும், திருச்சியிலும் பொன் வெள்ளி முதலியவற்றாலான கல்நகைகள் வெகு நேர்த்தியாகச் செய் யப்படுகின்றன'' என்று கார்லே என்றவர் 800 ஆண்டுகளுக்கு முன்னர்க் கூறிப் போந்தனர். இதை ஆதாரமாகக் கொள்ளாவிடினும், புராதீன ஸ்தலங் களான ஸ்ரீரங்கம் போன்ற கோவில்களுக்கு, சேர, சோழ, பாண்டிய மன்னர் கள் கைங்கர்யமாகச் செய்து வைத்துள்ள ஆபரணங்களைக் கொண்டே நம்நாட் டுத் தட்டார்களுடைய திறமையைக் காணலாம்.

பின்பு, தமிழ்நாட்டிற்கு வந்துற்ற சரித்திராசிரியர்கள், தாம் கண்டதை எழுதிவைத்திருக்கின்றனர். அவர்களில், பூசானன் என்பவர் ஆடைகளின் சிறப்பையும், நயத்தையுமட்டிலுமே விஸ்தரித்துப் போந்தார். மற்றைய கைத் தொழில்களை அவர் கவனித்திலர் போலும்.

இத்தகைய சிறப்பினையுடைய நம் தமிழ்நாட்டுக் கைத்தொழில் இந்நாளில் குன்றியிருப்பதற்குக் காரணம் நவீன மொன்றேயாகும். பண்டை நாட்களில், ஒவ்வொரு பிரிவினரும் தத்தமக்கேற்பட்ட கைத்தொழில்களைச் சரிவரச்செய் துவந்தனர். நவீனம் ஆதிக்கம் பெறவே ஒவ்வொருவரும் தொழிலில் சிரத்தை குன்றிப் பொதுக் கல்விபயிலத் தலைப்பட்டனர்; பட்டங்கள் பெற்றனர். இவற்றால் பயனென்னை? குமாஸ்தாவேலை பார்க்கும் வகையில் தற்காலப் பொதுக்கல்வி பிரயோஜனப்படுமே யன்றித் தொழிலை நடத்தும் வகையில் பயன் படாது. ஆதலால் தொழில் குன்றிற்று; வறுமை மேலிட்டது; தமிழ கத்தே இருள் சூழ்ந்தது. எனினும் மஹாத்மா ஒருவர் தோன்றினர். அவர் **"கைத்தொழில்தான் நம் நாட்டை அடிமையினின்றும், வறுமையினின்றும் விடுவிக்கும்"** என்று எல்லோருக்கும் உபதேசித்தார். தமிழர்கள் இதைக் கேட்டுப் புத்துயிர் பெற்றெழுந்தனர்; பற்பல இடங்களில் கைத்தொழிலா லயங்களை ஸ்தாபித்தனர். அத்தொழில்கள் சிறிது தலையெடுக்க ஆரம்பித் திருக்கின்றன. ஆதலின் அத்தொழில்களையும், அத்தொழிலாளர்களையும் ஊக்குதல் நமது கடமையென ஒவ்வொரு தமிழரும் உணர்ந்து தமிழ்நாட்டுக் கைத்தொழிற் பண்டங்களை வாங்குவதே தமிழராகிய நமது கடமையாகும்.

தமிழ்நாட்டின் கைத்தொழில் செழிக்க - நாம் நம்மகத்தே உற்பத்தியாகும் பொருள்களை வாங்கியும், பல புதிய கைத்தொழிற் சாலைகளை ஸ்தாபிக்க உதவிபுரிந்தும் வருவோமானால் கைத்தொழிற் காரணமாக நம் நாடு மேன் மையை யடையுமென்பதில் ஐயமின்றாம். இறைவனும் அருள் புரிவானாக!

**ஸ்ரீ. வே. வ. திருச்சி.**

# வைத்தியப் பகுதி.

## மயிர் நரைத்தலின் காரணம்.

ஐயன்மீர் !

நம்மில் அநேகருக்கு இளமையில் மயிர் நரைத்து விடுகிறது. இதற்கு நமது சரீரசுகமே காரணம். இதையறியாது பல தைலங்களை உபயோகித்தும் நரை நீங்குவதில்லை.

நரையின் காரணத்தைப்பற்றி (Industry) "இண்டஸட்ரி" என்னும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது:—

"தலையிலுள்ள மயிரின் நிலைமை பெரும்பாலும் தேகாரோக்கியத்தைப் பொறுத்ததாக விருக்கிறது. ஆகையால் ஒருவருக்கு இளமையில் நரைக்க வாரம்பித்தால் முக்கியமாய்ச் செய்யவேண்டிய காரியம் யாதெனில் தம் தேக ஸ்திதியைப்பற்றி வைத்திய நிபுணர்களிடத்தில் யோசிப்பதே.

"அகால நரைக்கு அநேக காரணங்களுள. ஆனல் அது குணப்படுத்த முடியாதது என்பதே இல்லை. சரியான சிகிச்சையாலும் கொஞ்சம் பொறுமையாலும் மயிர், தன் (சொந்த) நிறத்தை யடையச் செய்யலாம்.

"அகால நரையின் முக்கிய காரணம் என்ன வெனில், நரம்புக்கு அதிக வேலை, கவலையால் மனமுடைதல், தலைமயிருக்குக் கேடு உண்டு பண்ணத்தக்க சோப் உபயோகித்தல், தேகத்தில் சுண்ணும்பு ஸத்து அதிகமாயிருத்தல், இவைகளே யாகும். இனி; வாதநோயால் அடிக்கடி வருந்துபவர்களுக்கும் சீக்கிரம் நரைக்கும்.

"இளநரை வம்ச பரம்பரையாக அபூர்வமாக வருவதுண்டு. அதைச் சௌக்கியப்படுத்தல் அரிது.

"இளநரையுள்ள குடும்பத்துப் பெண்கள் ஆகார விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும். நல்ல புஷ்டியான ஆகாரம் தாராளமாய் (மிதமாய்) சாப்பிடவேண்டும். அடிக்கடி மீன் எண்ணெய் அல்லது அதுபோன்ற புஷ்டிகரமான மருந்து எவையாயினும் உட்கொள்ளவேண்டும். ஆனல் கொழுப்பை உண்டாக்கக் கூடிய ஆகாரங்களும் தேத்தண்ணீர் அதிகம் குடித்தலும் கண்டிப்பாய் நிறுத்தப்படவேண்டும். (ஏனெனில், இவை ஜீர்ண ஹானியைத் தருவன. ஆகையால், தலைமயிருக்குக் கேடு உண்டாக்கும்.)"

மேலும், பலவித கூந்தல் தைலங்களை உபயோகித்தலும் நரையை உண்டாக்குகிறது.

ஆகையால், நம் (ஆனந்தபோதினியின்) நண்பர்கள் நரையை நீக்க வேறு வழிகளில் பணம் செலவிடாது, மேற்குறித்த சுகாதார முறையைக் கவனித்து நடந்து அதனல் அடையும் பயனை இவ்வானந்தனின் மூலமாக வெளியிடுவார்களென்று நம்புகிறேன்.

சி. தே. சுந்தரராஜய்யங்கார், தேவகோட்டை.

# பெண்மக்கள் பகுதி.

## மாதரும் குடும்பமும்.

(181-ம் பக்கத் தொடர்ச்சி.)

"பெண்கள் புருஷர்போல் வெளிக்காரியங்களை ஏன் செய்யலாகாது?" என்னும் இக்கேள்விக்கு 'சிருஷ்டிகர்த்தாவின் நோக்கம் அதுதான்' என்பதே சுலபமான விடையாகும். ஆனால் இச்சமாதானத்தைச் சிலர் ஏற்றுக் கொள்ளார். 'ஆண்களால் செய்யப்படும் காரியங்களில் எந்தக் காரியம் பெண்களால் செய்யப்படாமலிருக்கின்றது? அவர்கள் பயிர்வேலை செய்கின்றனர்; சுமைதூக்குகின்றனர்; உத்தியோகம் புரிகின்றனர்; போர்க்களத்திற்கும் செல்கின்றனர். நாம் பயிற்சிகொடாமல் அடக்கிவைத்திருப்பதால் போர்வீரர்களாக அமர்தல் முதலியதொழில்களில் திறமையற்றிருக்கின்றனரேயன்றிக் கூடாமையாலென்பதல்ல. ஆகவே எக்காரணத்தால் அவர்கள் வெளிக்காரியங்களுக்கு நியமிக்கப்படத்தக்கவர்களல்லர்' என்பது அவர்தம் கேள்வியாகலாம். ஆகவே இதற்குச் சிறிதளவேனும் சமாதானம் கூறவேண்டியது அத்தியாவசியமாகும்.

தொழில்கள் பழக்க மிகுதியால் யாவரும் செய்யக்கூடியவை. புருடரிற் சிலர் சமைத்தல் தொழிற் செய்வதனால் அனைவரும் பெண்களைப்போல அதைச் செய்வார்களென்று கூறமுடியாது. அதைப்போலவே ஸ்திரீகளிற் சிலர் போர்புரிதல் முதலிய ஆண்மைத் தொழில்கள் புரிந்தாலும் அவை ஏகதேசமே. எல்லோரும் அவற்றிற்கேற்றவரெனச் சொல்ல முடியாது. இயற்கையைச் செயற்கையால் மாற்ற முயன்றாலும் இயற்கை மாறாது. வீரம், சௌரியம், பராக்கிரமம் முதலியன ஆண்பாலர்க்கே யுரியவை. அதனால்தான் புருஷத்தன்மைக்கு ஆண்மை, பௌருஷம் எனப் பெயரிட்டிருக்கின்றனர் பெரியார். முற்காலத்திலிருந்த நாரீமணிகளிற் சிலர் யுத்தகளத்திற் கடும்போர் புரிந்திருக்கின்றனர். சம்பராசுரயுத்தத்திற் கைகேயி தசரதனுக் குதவிபுரிந்ததும், நரகாசுரனுடன் சத்தியபாமை அமராடியதும், சுபத்திரை சாரத்தியம் செய்தமையும் நூல்களால் அறியக்கிடக்கின்றன. மகம்மதியர் அரசாட்சி நடத்திவந்த காலத்தில் அவர்களை எதிர்த்துப் பொருத வீரமாதரைச் சரித்திரங்கள் இன்னும் புகழ்கின்றன. ஆயினும் இவை ஏகதேசமே.

மாதர், இயல்பில் பயந்த சுபாவமுடையவர்; மிருது பாஷிணிகள்; மென்மையுடையார்; நாணமுடையோர்; இக்காரணங்களால் மெல்லியலார் (மெல்லியலார்-மென்மை இயலார் = மென்மையாகிய இயல்பினையுடையார்)" எனப்படுகின்றனர். இவர், கடினமான வேலைகளைச் செய்யும் சத்தியில்லாதவர் ஆயினும் எவ்வளவு துன்பங்கள் வரினும் பொறுமையாகச் சகித்துக்கொண்டு காரியங்களை நடத்தும் குணமுடையோர்; வீட்டையும் அதிலுள்ள பொருள்களையும் ஒழுங்காகவும் சீராகவும் வைக்கும் ஆற்றல் மிகுதியும் உடையவர். இப்படிப்பட்ட தன்மை புருஷரிடம் கிடையாது. இக்காரணங்களால் ஸ்திரீகள் குடும்ப நிர்வாகத்திற் கேற்றவர்களென்பது விளங்குகின்றது. தவிர,

ஸ்திரீகள் குடும்பக் காரியத்திற்கென்று படைக்கப்பட்டவர்களே யென்பதை வற்புறுத்தும் மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. அதாவது, பிரசவமே. புருஷரைப்போலவே மாதரும் எல்லாக் காரியங்களும் செய்யத் தகுந்தவரே யென்பதை ஒருவாறு ஒப்புக்கொண்டாலும், எக்காலத்தும் அவர்கள் அப்படிச் செய்யமுடியாதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. அவர் கருப்பகாலத்தும் பிரசவத்திற்குப்பின்னருமாகச் சிலமாதங்கள்வரை யாதொரு தொழிலும் செய்ய இயலாதவராகின்றனர். இவ்வாறு பிரஜாவிருத்தியாகிய பிள்ளைகளைப் பெறுதலும், பாலூட்டி வளர்த்தலுமாகிய இத்தொழிலைப் பெண்களிடமே அமைத்திருத்தலால் சிருஷ்டிகர்த்தா அவர்களை வீட்டுக்காரியங்களுக்கென்றே படைத்தாரென்பது நிச்சயமாகிறது.

அவர்கள் எந்தவேலை செய்தாலும் செய்யட்டும். எப்படியும் சுவதந்திரராக விராமல் புருஷரின் ஆதீனத்திலிருக்க வேண்டியவர்களே யாவர்.

கடவுள் ஒருவர் உண்டென நம்பும் ஆஸ்திகராயுள்ளோரனைவர்க்கும் அக்கடவுளாலோ, அவரருள்பெற்ற பெரியோர்களாலோ செய்யப்பட்டதாகக் கருதப்படும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலியவை இருக்கின்றன. அவற்றிற் சொல்லியபடி ஒழுகவேண்டியது அவர்கள் கடமையாகும். ஆராயுமிடத்து எல்லா மத நூல்களும் ஸ்திரீகளுக்குப் புருஷரே தலைவர் என்று கூறுவதைக் காணலாம். தற்கால நாகரிகத்தின் சிருஷ்டிகர்த்தர்களாயிருக்கும் மேல்நாட்டாரின் வேதமாகிய விவிலிய நூலும் இவ்வாறே கூறுகின்றது. ஆகவே இதுகாறும் காட்டிய காரணங்களால் மாதரே குடும்பகாரியத்திற்கேற்றவர்களென்பது பெறப்பட்டது. இனி அவர்கள் கொண்டிருக்கவேண்டிய குணங்க ளின்னவை என்பதைக் கூறுவாம்.

மாதர் புருஷரின் ஆதீனத்திலிருக்கவேண்டியவர்களாகலின் அவர்கள் தம் இளமைப்பருவத்தில் பெற்றோர் கற்பிக்கும் வழியிலும், விவாகமாயினபின்பு கணவர் கற்பிக்கும் நெறியிலும் ஒழுகவேண்டியவராகின்றனர். அந்நெறியே கற்பெனப்படுவது. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என ஔவை கூறியதும் இதுபற்றியேயாகும். இதற்கு மாறாக நடந்தால் கற்பிற்குப் பழுதுண்டாகும். ஸ்திரீகள் எப்போதும் புருஷர் வார்த்தைக்கு மாறாகப் பேசலாகாது. புருஷர் நல்லொழுக்க முடையவராயிருப்பின், அவர் வார்த்தைகள் நல்லவைகளாயிருக்கும்-நன்றாக யோசித்தபின்பே கூறுவார்கள். ஆகலின் மனைவியர், அக்கணவர் கூறும் வார்த்தைகள் தம் கருத்திற்கு மாறாகக் காணப்பட்டாலும், நயமாக,'இதைக்காட்டிலும் இப்படிச்செய்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன்'; 'இது யுக்தமானதாகத் தோன்றவில்லை' என்று இவ்வாறு கூறவேண்டுமே யல்லாமல், ஆத்திரமாகவும் படபடப்பாகவும் 'இது கூடாது; என்னால் முடியாது; நான் செய்தேதீருவேன்; உமக்கென்ன அதைப்பற்றி' என்று யாவரும் திடுக்கிடும்படி வெடுக்கெனப் பேசலாகாது. அப்படிப் பேசினால் புருஷர் சற்று பிடிவாதக்காரராயிருந்தால் தம் பிரியப்படியே செய்ய முயல்வதுமன்றி வெறுப்பும் கொள்வர். பிடிவாதக்காரரா யிராவிட்டாலும்

தம் கோரிக்கை நிறைவேருமற் போனதற்காக வருத்தமும், மனைவியரிடத்து அதிருப்தியும்கொள்ளல் நேரும்.

புருஷர் நற்குணமில்லாதவராயின் மாதர் எதிர்த்துப் பேசுவதிற் பயனில்லை. அது குன்றைமுட்டிய குருவிபோலாகும். சிலர் துஷ்ட கணவராயிருந்தால் அடியும் உதையும் அதற்குப் பலனுகும். எப்படிப் பேசுவதாயினும் சமயமறிந்து தக்கபடி பேசுவதே நல்லது. 'இப்படிப் பேசுவதால் பயனுண்டாகும்' என்று, பேசத்தக்கதை ஆராய்ந்து பேசவேண்டும். பயனற்ற வார்த்தைகளை வீணுகப் பேசி சண்டை சச்சரவுகளை உண்டாக்கிக்கொள்வதால் பயன் யாது என்பதை ஒவ்வொருவரும் ஆலோசித்தலவசியம். 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' 'பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்' 'எதிரிற்பேசும் மனையாளிற் பேய் நன்று' 'இல்லாள்-வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில், புலிகிடந்த தூறுய்விடும்' என்னும் ஆன்றோர் வாக்கியங்களையும் கவனிக்கவேண்டும் (தொடரும்.)

பு. ஸ்ரீனிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

## உலகத்திலுள்ள ஒப்பற்ற அதிசயங்கள்.

["ஸ்கூல் போக்" என்னும் ஆங்கிலபத்திரிகையிலிருந்து இவை மொழிபெயர்ககப்பட்டன.]

1. பிரமிட்ஸ் (The Pyramids) என்பவை மிகவும் பெரியவையும் பழமை பொருந்தியவையுமான கட்டிடங்களாகும். இக் கட்டிடங்களைப்போல் ஒன்று இனி எம்மனிதராலும் நிருமித்தலரிது. இவை எகிப்த் (Egypt) தேசத்தை ஆண்டுவந்த ச்யாப்ஸ் (Cheops) என்னும் அரசனுல் கட்டப்பட்டவை. பெரியனவும், சிறியனவுமா யமைந்த இக்கட்டிடங்களில் அதிக உன்னதம் பொருந்தியவை, கிஜே (Gizeh) என்னும் இடத்தில் இருக்கின்றன. அவைகள் மிக்க அற்புதம் பொருந்திய சமாதிகள். காலஞ்சென்ற பழைய காலத்து எகிப்து அரசர்களெல்லாரும் அவைகளில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிருர்கள். பெரிய பெரிய பாறைக் கற்களைக்கொண்டு அதிஜாக்கிரதையுடன் அவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அக்கட்டிடங்கள் நான்கு முக்கோண வடிவங்களைக் கொண்டவை; உச்சியில் மேல்மட்டத்தில் கூர்மை பொருந்தி யிருக்கின்றன. கிஜே என்னும் இடத்தில் உள்ள ஒரு பிரமிட் கட்டிடத்தின் அஸ்திவாரம் 480,000 சதுர அடியுள்ளது; 200,000 அடிமைகளைக்கொண்டு கட்டி முடிக்கப்பெற்றது. இதைக்கட்ட 20-வருஷங்களுக்குமேல் சென்றனவாம். எகிப்து தேசத்தின் ஆசாரப்படி இறந்த அரசர்களின் பிரேதங்கள் இத்தகைய பிரமிட் என்னும் கட்டிடத்தினடியில் பூமிக்குள் அறைசெய்து அதில் அடக்கஞ் செய்யப்படுகின்றன. அவ்வாசர்கள்

தம் வாழ்நாட்களில் கையாண்டுவந்த ஆயுதங்களும், கவசங்களும், அணிந்திருந்த உடைகளும் அவர்களது சவத்துடன் வைக்கப்படுமாம்.

சமீபகாலத்தில் ட்யூடன் காமன் (Tutan Khamen) என்னும் அரசன் சமாதி கண்டுபிடிக்கப்பட்டது. அதில் மேற்சொல்லப்பட்ட ஆயுதங்களும், கவசங்களும், உடைகளும் இருந்தன. எகிப்துதேசத்தார்கள், இறந்தவர்களின் ஆத்மா என்றைக்காவது ஒருநாள் அவர்களுடைய உடலுக்குள் வந்து சேருமென்று நம்பி இப்படிச் செய்வது வழக்கம். தலை மனிதனைப்போலவும், மற்ற பாகங்களெல்லாம் சிங்கத்தைப்போலவும் அமைக்கப்பட்ட ஸ்விங்ஸ் (Sphinx) என்னும் பெரிய உருவம் ஒன்று ஒரே பாறைக்கல்லில் செதுக்கப்பட்டு கிஜே (Gizeh) என்னுமிடத்தில் 4,000 வருஷங்களுக்கு முன்னரே இந்த பிரமிட் என்னும் கட்டிடத்தின் சிகரத்தின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. அச் சிகரத்திலிருக்கும் அவ்வுருவம் அரசர்களை அடக்கம்செய்யும் அச்சமாதிகளையும், அங்கிருக்கும் பெரிய வனுந்தரத்தையும் காக்கும்பொருட்டு வைக்கப்பட்டிருக்கிறதாம். அவ்வுருவம் பார்ப்பவர்களுக்கு பயங்கரத்தை உண்டுபண்ணக் கூடியதா யிருக்கிறதாம். சியாப்ஸ் (Cheops) என்பவனின் குமாரனுன செவ்ரன் (Chephren) என்பவனுல் அஃதமைக்கப்பட்டது.

2. க்ளியோபாட்ராவின் ஊசி (Cleopatra's Needle):—எகிப்து தேசத்தை ஆண்டுவந்த க்ளியோபாட்ரா என்னும் அரசிக்கும் இந்த ஊசிக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. இது, நான்குபக்கங்களும், தலைப்பில் கூர்மை வாய்ந்தது; ஒரே பிரம்மாண்டமான பாறையில் செதுக்கப்பட்டது; கி. மு. 1600-ம் வருஷத்தில் ஹெலியோ பொலிஸ் (Heliopolis) என்னும் இடத்திற்கு அருகே கட்டப்பட்டது. ஆனுல் இது இப்பொழுது தெம்ஸ் ஆற்றங்கரையில் இருக்கிறது. இதன் உயரம் $60\frac{1}{2}$ அடி; நிறை 186 டன்.

3. கலிஸீயம் (Coliseum) என்னும் கட்டிடம்:—இது கி. பி. 80-ம் ஆண்டில் வெஸ்பாஸியன் (Vespasian) என்பவனுல் ரோமாபுரியில் கட்டப்பட்ட வட்டமான பெரிய கட்டிடம். இக்கட்டிடத்தில்தான் ரோமாபுரிவாசிகள் தமது விளையாடல்களையும், வேடிக்கைகளையும், குதிரைகளால் இழுக்கப்படும் ரதபந்தயங்களையும் நடத்துவது வழக்கம். இக் கட்டிடம் 5-எக்ரா விஸ்தீரணமுடையது. இது 100,000 ஜனங்களைக்கொள்ளும்; வெளிப்புறத்தில் 602-அடி நீளமும், 513-அடி அகலமும் பொருந்தியிருக்கிறது. இதில் 80-வழிகளுடன் கீழ்த்தளமிருக்கிறது. 160-அடி உயரம்வாய்ந்த 4-மேல் தளங்கள் இருக்கின்றன. ரோமானியர்களின் பெருமைக்குரிய கட்டிடங்களில் இஃது ஒன்று.

4. சீனுதேசத்திலுள்ள பிரம்மாண்டமான சுவர். (The Great Wall of China):—மங்கோலியர் என்னும் ஜாதியார் தம்மீது படையெடுத்து வாராமல், அவர்களைத் தடுக்கச் சீனர்களால் இப்பெரிய சுவர் சீனுதேசத்திற்கு வடமேற்கில் கட்டப்பட்டிருக்கிறது. இதன் கட்டிடவேலை கி. மு. 210-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சுவர் 1500-மைல் நீண்டிருக்கிறது. சில

இடங்களில் இச் சுவர் 40-அடி உயர்த்தப்பட்டு அதன்மேல் இரண்டு வண்டிகள் சேர்ந்தாற்போல் போகும்படியான அகலத்துடன் இருக்கின்றதாம்.

5. லிபர்டி என்னும் விக்கிரகம். (The Statue of Liberty):—நியூயார்க் என்னும் குடாக்கடலிலுள்ள பெட்லர் (Bedler) தீவில் இந்த விக்கிரகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் உயரம் 151-அடி; எடை 100-டன்; மதிப்பு 120,000 பவுன். இவ்விக்கிரகத்தின் நீண்ட கையிலிருக்கும் தீவட்டி, அநேக மைல்களுக்கப்பாலுள்ளவர்க்கும் தெரியும். இது அகஸ்டி பார்தோல்டி (Auguste Bartholdi) என்பவரால் செய்யப்பட்டது; இதனை பிரான்சு தேசத்தார் 1883-ம் வருஷத்தில் அமெரிக்கா தேசத்திற்கு வெகுமதியாகக் கொடுத்துவிட்டார்கள்.

6. ஈப்பல் கோபுரம் (The Eiffel Tower):—இக்கோபுரம் உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் பெரியது; இரும்பால் செய்யப்பட்டது. இப்பெரிய கோபுரம் ஏறக்குறைய 1,000 அடி உயரம் பொருந்தியது; 150-கஜ சதுரமுள்ள பரப்பின்மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. 1887-ம் வருஷத்தில் இது பாரிஸ் நகரத்தில் கஸ்டேவ் ஈப்பல் (Gustave Eiffel) என்பவரால் 200,000 பவுன் செலவு செய்து கட்டப்பட்டது. இதற்கு மூன்று மாடிகளுண்டு. பூமி மட்டத்திலிருந்து முதல்மாடி 190-அடியும், இரண்டாவது 380-அடியும், மூன்றாவது 905-அடியுமாக அவை உயர்ந்திருக்கின்றன. கடைசி மாடியில் நூற்றுக் கணக்கான ஜனங்கள் அடங்கக்கூடிய ஒரு கண்ணாடிமண்டபம் இருக்கிறது. இதன் உச்சியில் பெயர்போன மின்சார விளக்கு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்விளக்கொளியை பாரிஸ் நகரத்திற்கு 50-மைலுக்கப்பாலிருந்து பார்க்கலாம். அம்மண்டபத்தின் உட்பக்கத்தில் நாடகசாலையும், சிற்றுண்டி சாலையும், இன்னும் வேடிக்கைக்காக அமைக்கப்பட்ட அறைகளும் இருக்கின்றன.

7. மாஸ்கோவிலுள்ள மணி (The Bell of Moscow):—இந்தமணி, உலகத்திலுள்ள மணிகளுக்கெல்லாம் அரசனைப்போலுள்ளது. 1653-ம் ஆண்டில் வார்ப்படம் வார்க்கப்பட்டது. இதன் நிறை 198-டன்; உயரம் 19-அடி. இதன் விளிம்பு வட்டம் 60-அடி கொண்டது. நெருப்பின் காரணமாக இது கீழே விழுந்து பூமியில் 1837-ம் ஆு வரை புதைந்து கிடந்தது. ஷை வருஷத்தில் நிகலஸ் (Nicholas) என்னும் ருசியதேசத்துச் சக்கரவர்த்தி, ஒரு மேடை கட்டி அதன்மீது இம்மணியை ஏற்றுவித்தார். இன்னொரு பெரியமணி இம்மணிக்குப் பக்கத்தில் ஒரு கோபுரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறது. அதன் நிறை 128-டன். பர்மாதேசத்தில் மிங்கூன் (Mingoon) என்னும் இடத்திலும் ஒரு பெரிய மணி இருக்கிறது. அது 125-டன் நிறையுள்ளது.

8. பர்த் என்னும் ஜலபாகத்தின் குறுக்கேயுள்ள வாராவதி (The Bridge over the Firth of Forth):—ஸ்காட்லண்டுதேசத்திலுள்ள பர்த் ஆப் போர்த் என்னும் ஜலபாகத்தின் குறுக்கேயுள்ள இப்பெரிய வாராவதி 1889-ம் ஆுத்தில் கட்டப்பட்டது. இது 8,290 அடி நீளமுள்ளது. இதில் இரண்டு கண்களே உள்ளன; அவை ஒவ்வொன்றும் 1710-அடி நீளமுள்ளவை. அவற்றின் வளைவு 680-அடி; அவை 350-அடி எஃகுத்தண்டவாளங்களால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அதன் ஜலப்பரப்பிலிருந்து 152-அடி உயரத்தில் ரயில் ஓடும் பாதையிருக்கிறது. பெயர்போன என்ஜினியர் பௌலர் (Fowler), பேக்கர் (Baker) என்னும் இருவரால் இது கட்டப்பட்டது. இதனைக் கட்டி முடிக்க 7-வருஷங்கள் சென்றன; 4000-மனிதர்கள் வேலை செய்தார்களாம்.

நாகவேடு-அப்பாதுரை.

## ஓர் சந்தேக நிவிர்த்தி.

நம் போதினிக்கு ஜீவிய சந்தாவின் ஏற்பாடு எவ்விதமானதென்று சிலர், கடிதங்கள் எழுதிக் கேட்கின்றனர்; ஆதலின், அவ்விவரத்தை இதனடியில் விளக்குகிறோம்: இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களிலுள்ளவர்கள் ரூபா 15-ம், அன்னிய நாடுகளிலிருப்பவர்கள் ரூபா 20-ம் கட்டிவிட்டால், எவ்வருஷம் ஜீவிய சந்தாதாரராகச் சேர்கின்றனரோ அந்த வருஷ ஆடிமாத முதற்கொண்டு அவர்களுடைய ஆயுள் உள்ளவரையிலும் பத்திரிகை அனுப்பப்படும்.

பத்திராதிபர்.

---

## வீடுகளில்தான் பெருச்சாளி! தபாலாபீஸ்களில் கூடவா பெருச்சாளி!

நமது பாரதநாட்டில் தாய்பாஷையை அநேகர் வெறுத்துவிட்டார்கள் எனினும் சிலர்மட்டும் அதில் அபிமானம்வைத்து அதனை ஆதரித்து வருகின்றனர். ஆதலால் சிலர் பத்திரிகைகளை அபிமானித்தோ, அல்லது தங்களுக்குத் தெரியாததைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினுலோ, அல்லது சந்தாத்தொகை கொஞ்சம்தானே நமக்கும் மாதம் மாதம் சஞ்சிகை வரட்டும் என்னும் நோக்கத்தாலோ பத்திரிகைகளைத் தருவிக்கிறார்கள். அவ்வாறு தருவிப்பதிலும் முன்பணம் கட்டிவிடவேண்டியிருக்கிறது. கட்டியும் சஞ்சிகை மாதந்தோறும் வரத் தாமதம் ஆகிறது; சிலருக்குச் சஞ்சிகையே வந்து சேருவதில்லை. பணமும் முன்னதாகவே கட்டிப் பத்திரிகை சேராவிடில், சந்தாதார் மனம் என்ன நிலையிலிருக்கும்? ஆனந்தபோதினி ஆபீஸார் மாதந்தோறும் தேதிப்படி ஒழுங்காகவே பத்திரிகையை அனுப்பிவிடுகிறார்கள். அனுப்புகிற சஞ்சிகையை வழியில் எந்தப் பெருச்சாளியோ இரையாக்கிக் கொள்கிறது. இது ஈசனுக்குத்தான் தெரியும். அந்தப் பெருச்சாளிகளுக்குத் தண்டனையும் அவர்தாம் விதிக்கவேண்டும். சந்தாதார் என்ன செய்வார்கள்? மறுபடி ஒரு கார்டு எழுதிப் போதினி ஆபீஸிலிருந்து வேறு சஞ்சிகை தருவித்துப் பார்க்கவேண்டியதாயிருக்கிறது. அவ்வாறு மறுபடி வரும் சஞ்சிகையையும் ஏன் பெருச்சாளி தின்பதில்லை என்றால், 'பிறகு வந்ததையும் தின்றுவிட்டால் சொந்தக்காரர் நம்மை அடித்துவிடுவார்' என்ற பயத்தினால் தின்னவில்லை. அதனால் அது சந்தாதாரருக்குப்போய்ச் சேர்ந்துவிடுகிறது போலும். இப்படிச் சஞ்சிகை பெருச்சாளிக்கு இரையாவதினால் சஞ்சிகை சேராதவர்களுக்கு அரையணாவும், போதினி ஆபீஸுக்குச் சஞ்சிகை விலை அணா 2-ம், ஸ்டாம்பு அணா 0—0—3-ம், ஆக அணா 0—2—9 நஷ்டமேற்படுகிறது. இவ்வித நஷ்டத்தை போஸ்டாபீஸ் அதிகார வர்க்கத்தினர் கவனிப்பது நலம்.

N. B.—சென்ற மாதம் வந்த சஞ்சிகையில் மதராஸ், சௌக்கார்பேட்டை போஸ்டாபீஸில் 18-11-26 முத்திரை விழுந்திருக்கிறது. இவ்விடம் 24-11-26 முத்திரை விழுந்திருக்கிறது. போஸ்டுமாஸ்டரைக் கேட்டதில் "R. M. S.-ல் தவறிருக்கும்" என்கிறார்.

P. A. V. அய்யர்,
450-ஆனந்தபோதினி சந்தாதாரர், திருப்பத்தூர்.

## விநோதப் பகுதி.

நண்பர்கள், காப்பி ஹோட்டல்களில் சென்று சிற்றுண்டியருந்திவரும்போது, சப்ளை செய்தவர்கள், சொல்கிற கணக்குப்படியே துட்டைக் கொடுத்

துவிட்டு வரவேண்டுமென்றும், அவர்கள் அதிகமாகச் சொன்னாலும் அவர்களிடம் கணக்குக் கேட்பது கௌரவக் குறைவாகுமென்றும், முன்னோர் தேடி வைத்த பொருள்களைக் கண்மூடித்தனமாய்ச் செலவுசெய்யும் வீண் கௌரவ வாலிப சங்கத்தார், தங்கள் சபையில் ஒரு சிறந்த தீர்மானஞ் செய்துகொண்டிருக்கிறார்களாம். * * * * *

புதிதாக மணஞ் செய்துகொண்டவர்கள், இரவில் இரகசியமாகத் தங்கள் தாய்மார்களுக்குத் தெரியாமல் ஓமப்பொடி, காராப்பூந்திப் பொட்டணங்களை வாங்கிக்கொண்டு மனைவிமார்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள், மாமிமார்களுக்குத் தெரியாமல் தின்னவேண்டுமென்று அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்திருந்து எல்லோரும் படுத்தபின்பு எடுத்து ஒவ்வொன்றாக வாயில்போட்டு எலி கொறிப்பதுபோல் கொறிக்க ஆரம்பிக்கிறார்கள். சத்தமில்லாமல் மெல்லவேண்டுமென்று அவர்கள் எவ்வளவோ பிரயாசைப்பட்டு அடக்கி மென்றாலும் சத்தம் வெளியே கிளம்பிவிடுகிறது; மாமிமார்கள், மருமக்கள்மார்களின் குற்றத்தைக் கண்டுபிடிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பவர்களாதலின் வெகு நுட்பமாக அது, ஓமப்பொடி, காராப்பூநதி சத்தமென்றே தெரிந்துகொண்டு வயிற்றெரிச்சலுடன் "இழவு எலி வெடுக்கு வெடுக்கென்று சத்தம்போட்டுத் தூக்கத்தைக் கெடுக்கிறதே" என்று ஒரு கொம்பை எடுத்து, அவர்கள் புருஷரோடு படுத்திருக்கும் அறையின் கதவைத் தட்டுகிறார்கள். கலியாண மாப்பிள்ளைகள் கோபங்கொண்டு, "கிழட்டுப் பீடை! பேசாமல் தூங்கு" என்று அதட்டுகிறார்கள். கிழவிகள் ஒடுங்கி முணுமுணுக்கிறார்கள். தற்கால நாகரீக குடும்ப வாழ்க்கைவகைகளில் இதுவுமொன்று. * * * * *

துட்டுச் செலவில்லாமல் காப்பி குடிப்பதற்கு வீண்காரிய சங்க காரியதரிசி ஒரு வழி கண்டுபிடித்து வெளிப்படுத்தியிருக்கிறாராம்; அதை ஷை சங்கத்தாரெல்லோரும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று சங்கத் தலைவர் தீர்மானஞ் செய்ததின்பேரில் அவ்வழக்கம் நடந்தேறி வருகிறதாம். அதாவது, துட்டின்றிக் காப்பி சாப்பிட விரும்புவோர் காலை மாலை நேரங்களில் ஆரியபவன், ஆனந்தபவன் முதலிய ஓட்டல்களுக்கு முன்னே ஏதோ ஒரு முக்கியமான காரியமாக உலவுவதுபோல் உலாவிக்கொண்டிருக்கிறார்களாம்; பணம் செலவிடும் நண்பர்கள் எவரேனும் வருகிறார்களாம்; அவர்கள், இவர்களைக் கண்டதும், "வாருங்கள் காப்பி சாப்பிடலாம்" என்று உபசாரத்தோடு கூப்பிடுகிறார்களாம்; அப்போது, 'எனக்குப் பசியில்லை' என்று சொல்லிக்கொண்டே இவர்கள் கொஞ்சம் பிகுவோடு போய்க் காப்பி பலகார வேலையைக் கஷ்டமின்றி முடித்துக்கொண்டு வருகிறார்களாம்.

## உலகாநுபவக் குறிப்புக்கள்

(235-ம் பக்கத் தொடர்ச்சி.)

நீ ஒரு காரியம் செய்யும்பொழுது பிறர் யாராவது அக்காரியத்திற்குக் குற்றங்குறை சொல்லிவிட்டால் உன் மனம் எவ்வளவோ துன்பப்படுகிறது; நீ முகஞ் சுளிக்கிறாய்; குற்றஞ் சொன்னவர்களை உன் மனதிற்குள்ளாகவே பலவாறு நிந்திக்கிறாய். ஆனால் இன்னொருவர் செய்யும் வேலைக்கு மாத்திரம் நீ நோட்டம் சொல்லாமலிருப்பதில்லை. 'நமக்கு ஒருவர் கோளாறு சொன்ன பொழுது நம் மனம் துன்பமுற்றதே; அப்படித்தானே இவர் மனம் வருந்தும்' என்று நீ எண்ணுகிறதில்லை. இதற்குக் காரணம் யாதென வினவினால் 'அறி

யாமை' யென்றுதான் விடை தோன்றும். எனவே, பிறர் கோராமல் நாம் நமது அபிப்பிராயங்களை-பிறர் செய்யுங் காரியத்தின் சம்பந்தமான தவறுதல்களை-அவசரப்பட்டு வெளியிட்டுவிடுவது கூடாதென ஏற்படுகிறது. இதை ஆராய்ந்தறிந்து குற்றமற ஒழுகுவதே சிறப்புடைத்தாம்.

* * * * * * * * * * * *

வீடுகளில் நடக்கும்-நடக்கப்போகும்-சுபா சுப காரியங்களில் மிகவும் ஜாக்கிரதையாக வீட்டுப்பொருள்களைக் கவனித்துக்கொள்ளவேண்டும். அநேகமாய் பலர் வரும்-நடமாடும்-இடங்களில் பொருட்களை வைக்காமல் அப்புறப்படுத்துதலே மேன்மையாகும். ஏனெனில் விசேஷத்திற்காக வருவோரில் யோக்கியரும் இருப்பர்; அயோக்கியரும் இருப்பர். அநேக உருத்திராக்ஷப் பூனை போன்றவர்களும் படாடோபமாக வருவர். சில சமயங்களில் மறதியாக வைத்த ஓர் சாமான் மாயமாய் மறைந்துவிடும். அதைக் கண்டுபிடிப்பதற்காக இரண்டொரு மனிதர்களைக் கேட்க நேரிட்டாலோ அவர்கள் விபரீதார்த்தம் செய்துகொண்டு 'பார்த்தாயா! நம்மைத் திருடனென்றல்லவா மதித்து இப்படிக் கேட்டான்; இவன் வீட்டிற்கு வந்ததற்கு இந்தப் பெருமை போதும்; இனி இவ்வீட்டிற்கு வருவதே தகுதியல்ல' என்று முணுமுணுத்துப் பிரமாதமாகக்கோபித்துக்கொண்டு, யார் என்னசமாதானம் சொல்லினும்செவியில்லாதவர்களாய் ஒரே பிடிவாதமாகச் சென்றுவிடுகிறார்கள். பொருள் போனதுமன்றி இத்தகைய மனஸ்தாபங்கள் வீட்டுத் தலைவனை வேறே பீடிக்கிறது. இவ்வளவுக்கும் ஆதிகாரணம் அஜாக்கிரதையாக வைத்துவிட்ட பொருளேயல்லவா? ஆதலால் ஒவ்வொருவரும் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொண்டு அநாவசியமான விரோதங்களை ஒழிக்க முயலுவார்களாக.

* * * * * * * * * * * *

'கேளரதை' என்பது எல்லோரும் பொதுவாக விரும்பக்கூடியதொன்று. இதை உணராதவர்களே உண்மையறியாதவர்கள். ஒரு சாரார் ஒருவனைப் பரிகாசத்தினால் மரியாதைக் குறைவுபடப் பேசி, அவனைச் சுற்றியிருக்கும் சினேகிதர்களையோ, பந்துக்களையோ, உறவினர்களையோ நகைக்கும்படி செய்து, தாங்கள் அளவற்ற ஆனந்தமடைவது கண்கூடு. இகழப்பட்டவன், இகழ்ச்சிபுரிந்தவனைக் குறித்துப் பேச ஆரம்பித்துவிட்டாலோ உடனே அவனுக்குக் கோபம் வந்துவிடுகிறது. இது எத்தகைய ஒழுங்கீனம்! விளையாட்டுப்பேச்சு வினையாக மாறுவதுமுண்டு.

(தொடரும்.) தி. சி. குழந்தைவேலன்.

---

**சந்தாதாரர்களுக்கு**:—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாதமாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

# நாவல் பகுதி.

## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(237-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே நால்வரும் திடுக்கிட்டு ஆத்திரத்தோடு வீட்டிற்குள் ஓடினார்கள். ஐந்தாவது மனிதனும் (ஆனந்தலிங்கும்) அவர்களை யறியாமலே பின்னால் நுழைந்தான். அந்த நால்வரும் இரத்தக் கறையைக் கவனிக்கும் அவசரத்தில்

தங்களோடு இன்னொருமனிதன், இருப்பதை, அவன் ஆ! வென்று கூறியவரையில் கவனிக்கவில்லை. அம்மனிதன் இரத்தக்கறையைத் தொடர்ந்து சென்று கட்டிலின்கீழ்ப் படுத்திருக்கும் ஒரு நாயின் காயத்திலிருந்து அந்த இரத்தக்கறை வந்ததென்று நிரூபித்துவிட்டான். அச்சமயம் அந்த அறையில் ஒருவன் (ஆனந்தவலிங்) கூடவிருப்பதைப்பார்த்து அந்த ஆனந்தவலிங்கை நோக்கி,

"நீயார்? எங்கிருந்து வந்தாய்?" என்றான்.

**ஆனந்தவலிங்:**—"நான் ஒரு நாடோடி, இவ்வீட்டுக்கார எஜமானி என்னிடம் அப்போதைக் கப்போது ஏதாவது வேலைகொள்வதுண்டு" என்றான்.

ஆனந்தவலிங் இந்த இரத்தக்கறையைக் கவனித்துக்கொண்டு சென்றபோது மற்ற விஷயங்களையும் மிக்க கவனமாய்ப் பார்த்தான். அதனால் அம்மாதர் ஏதோ ஒரு கருத்தைக்கொண்டு வேண்டுமென்றே வீட்டைவிட்டுச் சென்றார்கள் என்று அறிந்துகொண்டான். அதோடு கறுப்பண்ணன் தன்னைவிட அதிகமான உளவு ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை யென்று தெரிந்துகொண்டான்.

இரத்தக்கறையின் உளவை ஆனந்தவலிங் கண்டுபிடித்தபோது கூடவிருந்த மனிதன் ஆத்திரத்தோடு தாழ்வாரத்திற்குச் சென்று மாடிமேல் அம்மனிதன் கண்டுபிடித்த இரத்தக்கறையின் உளவைப்பற்றிக் கறுப்பண்ணன் முதலியவர்களிடம் கூறினான்.

**கறுப்பண்ணன்:**—ஒரு மனிதனா? எம்மனிதன்?

**அம்மனிதன்:**—அந்த நாடோடி மனிதன், இவ்வீட்டெஜமானிக்கு அப்போதைக்கப்போது வேண்டிய வேலைகளைச் செய்கிறவனும் அம்மனிதனே.

**கறுப்:**—நான் எந்த மனிதனையும் பார்க்கவில்லையே.

**அம்:**—அதோ அந்தக் கிழவன் மேல்மாடியிலிருக்கிறான்.

**கறுப்:**—அடடா! நான் அவனை இந்நேரம் பார்க்காமற்போய்விட்டேனே. இம்மாதர்கள் சங்கதிகளைப்பற்றி அவன் ஏதாவது கூறியிருப்பானே. எதோ அக்கிழவனை யிங்கே யழைத்துவாருங்கள்.

அவர்கள் நமது வீரனை யழைக்கவேண்டிய அவசியமே யில்லை. அவன் அதற்கு முன்னமே மேல்மாடியிலிருந்து இறங்கி வந்துகொண் டிருக்கிறான். கறுப்பண்ணனைக் கடைசியாய் எதிர்க்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்பதே யவன் அபிப்பிராயம். ஆகையால் அவர்கள் எவ்வளவு சீக்கிரமாய்த்தன் மாறுவேடத்தைத் தெரிந்துகொண்டாலும் அவனுக்கு அவசியமில்லை. அவன் அதற்குச் சர்வாயத்தமாகவே யிருக்கிறான்.

ஆனந்தவலிங் தன் சுபாவமான துணிகரக் குணத்தோடும் தைரியத்தோடும் எதிரிகள் நால்வராயிருந்தாலும் தான் ஒருவனாகவே அவர்களையெதிர்ப்பதாகத் தீர்மானித்துக் கொண்டான்.

ஆனந்தவலிங் மேல் மாடியிலிருந்து இறங்கி வரும்போது வழியில் கறுப்பண்ணனைச் சந்தித்தான். கறுப்பண்ணன் அவனை நோக்கி,

"ஓ! என் பழைய நண்பனே! நீ இந்த வீட்டில் இச்சமயம் என்ன செய்கிறாய்?" என்றான்.

**ஆனந்த:**—"குடும்பம் வெளியில் சென்றிருப்பதால் நான் இங்கு காவலிருக்கிறேன்" என்றான்.

கறுப்பண்ணன் அவனைப் பெரிய அறைக்கு அழைத்துச் சென்றான். அவன் முகத்தில் ஒருவிதமான கலவரமும் வியப்பும் உண்டாயின. சற்று நேரம் உற்றுப்பார்த்து இந்த நாடோடி மாறுவேடமணிந்து கொண்டிருக்கிறானென்று தெரிந்து கொண்டான்.

அறைக்குள் சேர்ந்ததே கறுப்பண்ணன், சாளரங்களையும் திரைகளையும் மற்ற யாவற்றையும் மூடிவிட்டான்.

அவன் செய்கையைக்கண்ட அவன் நண்பர்கள் மிக்க வியப்பையடைந்தார்கள். ஆயினும் அவர்கள் ஒன்றும் பேசவில்லை.

சாளரங்கள் முதலிய யாவற்றையும் மூடியபின் கறுப்பண்ணன் ஆனந்தலிங்கை நோக்கி,

"அமிர்தம்மாள் எங்கு சென்றாள்?" என்றான்.

ஆனந்த:—எனக்குத் தெரியாது.

கறுப்:—நீ யுன்பாடங்களை நன்றாய்ப் படித்து வைத்துக்கொண் டிருக்கிறாய்.

ஆனந்த:—நான் படிக்கவேண்டிய பாடம் ஒன்றுமில்லை.

கறுப்பண்ணன் சட்டென்று தன் கைத்துப்பாக்கியை யெடுத்து ஆனந்தலிங் சிரசிற்கு நேராய் நீட்டிக்கொண்டு "நீ யார்" என்றான்.

ஆனந்த:—இப்படித்தான் ஒரு மனிதனை மரியாதையோடு ஒரு சங்கதியைப் பற்றிக் கேட்பதோ?

கறுப்:—ஆ! நான் அப்படித்தான் நினைத்தேன். நீ மாறு வேடமணிந்து கொண்டிருக்கிறாய். உன்வேடத்தைக் கழற்று. இன்றேல் உடனே உன் மூளை சிதறிவிடும்.

ஆனந்த:—உன் துப்பாக்கியைக் கீழே யிறக்கு, நான் என் மாறுவேடத்தைக் கழற்றுகிறேன்.

கறுப்:—அப்படியாயின் நீ மாறுவேட மணிந்திருப்பதாய் ஒப்புக்கொள்கிறாயோ?

ஆனந்த:—ஆம்; ஒப்புக்கொள்கிறேன்.

கறுப்பண்ணன் உடனே தன் துப்பாக்கியைச் சுட்டான். ஆனால் ஆனந்தலிங் கீழே விழவில்லை. ஏனெனில் கறுப்பண்ணனுடைய அயோக்கியதையும் கன்னெஞ்சமும் சூதும் ஆனந்தலிங் நன்றாய் யறிவானாதலால் மிக்க எச்சரிக்கையாகவே யிருந்தான். ஆகையால் கறுப்பண்ணன் துப்பாக்கியின் குதிரையை யிறக்கும் சமயம் ஆனந்தலிங் அவன் துப்பாக்கியைப் பிடித்தகையைச் சட்டென்று மேலே தட்டி விட்டான்.

வெடிச் சத்தம் கிளம்பியதே ஆனந்தலிங் கறுப்பண்ணனை நோக்கி ஒரு குத்து குத்தினான். அத்துஷ்டன் அப்படியே நின்று தள்ளாடினான். உடனே இன்னொருகுத்து விடவே இரத்தப்பெருக்கோடு தரையில் விழுந்தான்.

மேல் கண்ட ஆச்சரிய சம்பவம் திடீலென்று சம்பவித்தமையால் கறுப்பண்ணனுடைய கூட்டாளிகளில் யாரும் உதவி வருதற்கில்லை. ஆயினும் இரண்டு நிமிடங்களில் அவர்கள் எச்சரிக்கை யடைந்து விட்டார்கள். உடனே மும்முரமான யுத்தம் தொடங்கியது.

மூன்றுபேர் சேர்ந்து ஆனந்தலிங்கைத் தாக்கத்தொடங்கியும், இரண்டொரு நிமிடங்களில் மூவருடைய துப்பாக்கிகளும் தட்டி விடப்பட்டுத் தரையில்விழுந்தன; மூவரும் அவற்றின் பின்னாலேயே தரையில்விழுந்து புரண்டார்கள். ஆனந்தலிங் ஒருவனாகவே இரணகளத்தில் வெற்றி வீரனாய் நின்றான்.

ஆனந்தலிங் மட்டும் இரண்டு நிமிடங்கள் நிதானித்திருப்பானேல் உதவி வந்து விட்டிருக்கும். ஆனால் அதற்குள் அவனே யடித்து வீழ்த்தப்பட்டிருப்பான்.

(தொடரும்) ஆரணி-குப்புசாமி முதலியார்.

## முக்கிய கவனிப்பு.

நாம் இதற்குமுன், 1926ஞு அக்டோபர்மீ 31உக்குமேல் நமது ஆனந்த ஆங்கில பாஷா போதினி, சந்தாதாரர்களுக்கு ரூ. 1-0-0-க்கும், மற்றையர்க்கு ரூ. 1-8-0-க்கும் தரப்படுமென்று விளம்பரம் செய்யப்பட்டிருந்ததை நேயர்கள் அறிந்திருக்கலாம். அந்த ஏற்பாடு 31-12-26-வரையில்தான். இவ்விவரம் இதன் முற்பகுதியிலுள்ள பெரிய விளம்பரத்தின் கடைசியிலும் காட்டப்பட்டிருக்கிறது. மேற்குறித்த 1926ஞு டிசம்பர்மீ 31உக்குமேல் ஷை புத்தகத்தின் விலை, மற்றவர்களுக் கேற்பட்டது போலவே சந்தாதாரர்களுக்கும் ரூ. 1-8-0-தான். ஆதலின், அதற்குள் சந்தாதாரர்கள் ஷை குறைந்த விலையில் ஷை புத்தகத்தில் தேவையான காப்பிகளை வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். ஒரே சந்தாதாரர் அதே விலைக்கு எத்தனை புத்தகங்கள் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

நமது ஆனந்தபோதினி 2 - வதுஞு பவுண்டு வாலியம் தேவையென்று சிலர் எழுதுகிறார்கள். அதை அச்சிட அதிகச் செலவு பிடிக்குமாதலால் சிலரை மாத்திரம் உத்தேசித்து அச்சிட முடியாமலிருக்கிறது. அதற்கு 500 - கையொப்பக்காரராவது சேர்ந்தால் அதை அச்சிடுதல் கூடும். ஆதலின் வேண்டிய நண்பர்கள் எழுதித் தங்கள் பெயரை ரிஜிஸ்தர் செய்து வைத்து வந்தால் 500 - பேர்கள் சேர்ந்தவுடன் ஷை வாலியத்தை அச்சிட்டு அவர்களுக்குத் தருவோம்.

## வர்த்தமானக் குறிப்பு.

**ஒரே கருப்பத்தில் மூன்று குழந்தை:**—கோயம்புத்தூர் ஜில்லா, பொள்ளாச்சி தாலூகா, ஊத்திக்குளி என்னும் கிராமத்தில், கருப்பண்ணபிள்ளையென்பவரின் மனைவி, கருப்பாயி அம்மாளின் பிரசவத்தில் 10-11-26-ல் மூன்று பெண் குழைந்தைகள் பிறந்தன வென்று, நமது 11671 வது சந்தாதாரர் எழுதியிருக்கிறார். இது, தற்காலத்தில் அற்புத சம்பவமேயாகும்.

**நூற்றுக்கணக்கான முட்டை:**—கானடா தேசத்து வெள்ளை லெக்ஹார்ன் பெட்டைக்கோழி சென்ற நவம்பர் முதல் தேதியிலிருந்து இந்த நவம்பர் வரை 348 முட்டைகள் இட்டு உலகில் அதிக முட்டையிட்ட கோழி என்ற பெயரை ஸ்தாபித்திருக்கிறது. வருஷத்தில் இந்தக் கோழி சேர்ந்தாப்போல் 200 நாள், நாளுக்கொரு முட்டையாக இட்டிருக்கிறது. இதற்குமுன் ஆஸ்திரேலிய பெட்டைக்கோழி ஒன்று 1924-ல் 347 முட்டைகள் இட்டு, உலகில் அதிக முட்டை இட்டதெனப் பெயர் பெற்றிருந்தது. **த-நா.**

**இறந்த குழந்தை பிழைத்து விட்டது:**—நியூயார்க்கு ஆஸ்பத்திரிகளுக்குள் மிகவும் பெரியதான லாங்தீவு ஆஸ்பத்திரி வைத்தியரான டாக்டர் ராபர்ட்டுவிலி, இறந்த குழந்தை ஒன்றை மீண்டும் பிழைக்கச் செய்து விட்டதாகக் கூறுகிறார். 22 மாதக் குழந்தையின் தாயான மிஸஸ் ஆக்பிரைடு குழந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அது இறப்பதைப் பார்த்தாள். ஒரு தாதியை அவள் கூப்பிட்டுப் பார்க்கச் சொன்னதில் தாதுவாவது மூச்சாவது இல்லை. டாக்டர் விலியைக் கூப்பிட்டதில் அவர் ஒரு விசேஷ மருந்தை 1/60 டிராம் குழந்தைக்குப் புகட்டினார். பிறகு அவர் குழந்தையின் வாயில் ஊதி அதைப் பிழைக்கச் செய்தார். குழந்தை 8-நிமிஷநேரம் இறந்திருந்ததாக வைத்தியர் கூறுகிறார். **கு. மீ.**

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

**அக்ஷய௵ தைமீ—கலியுகாதி 5028, சாலிவாகனம் 1849,**
**பசலி 1336—கொல்லமாண்டு 1102—ஹிஜரி 1345,**
**இங்கிலீஷ் 1927௵ ஜனவரிமீ—பிப்ரவரிமீ**

| தேதி | ஜனவரி | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | வெ | து50-58 | ரோ43-3 | ம43-3சி | கரிநாள், உத்தராயண புண்யகாலம் பொங்கல் பண்டிகை |
| 2 | 15 | சனி | திர50-43 | மிரு44-8 | சித்60 | கரிநாள், மாட்டுப்பொங்கல் |
| 3 | 16 | ஞா | சது51-28 | திரு46-18 | சித்60 | கரிநாள் |
| 4 | 17 | திங் | ○53-15 | புன49-28 | அ49-28சி | பௌர்ணமி, வாகனமேற |
| 5 | 18 | செவ் | பிர56-18 | பூச53-35 | சித்60 | புஷ்யபகுளம், தைப்பூசம் |
| 6 | 19 | புத | துதி60 | ஆயி58-50 | சித்60 | நவக்கிரக சாந்திசெய்ய |
| 7 | 20 | வியா | துதி0-20 | மக60 | அமி60 | விதைவிதைக்க,கதிரறுக்க |
| 8 | 21 | வெ | திரி5-25 | மக5-0 | ம5-0சித் | வியாதியஸ்தர் குளிக்க |
| 9 | 22 | சனி | சது11-13 | பூர11-58 | சி11-58ம | யாத்திரை விலக்க |
| 10 | 23 | ஞா | பஞ்17-30 | உத்19-23 | அமி60 | |
| 11 | 24 | திங் | சஷ்23-50 | அஸ்26-43 | சி26-43பி | |
| 12 | 25 | செவ் | சப்29-40 | சித்33-38 | சித்60 | |
| 13 | 26 | புத | அ34-30 | சுவா39-33 | சித்60 | |
| 14 | 27 | வியா | நவ37-50 | விசா44-3 | சித்60 | |
| 15 | 28 | வெ | தச39-20 | அனு46-45 | சி46-45ம | |
| 16 | 29 | சனி | ஏ38-55 | கேட்47-38 | சித்60 | |
| 17 | 30 | ஞா | து36-33 | மூல46-25 | அ46-25சி | |
| 18 | 31 | திங் | திர32-20 | பூரா43-33 | மர60 | |
| 19 | 1 | செ | சது26-30 | உத்39-8 | அ39-8சி | |
| 20 | 2 | புத | ●19-23 | திரு33-35 | சி33-35பி | தை அமாவாசை |
| 21 | பிப்ரவரிமீ 3 | வியா | பிர11-20 | அவி27-15 | சி27-15ம | சந்திரதெரிசனம் |
| 22 | 4 | வெ | துதி3-5 திரி54-48 | சதை20-48 | சித்60 | அவமாகம்,கிரகபிரவேசம், வித்தியாரம்பம் செய்ய |
| 23 | 5 | சனி | சது46-58 | பூரட்14-28 | ம14-28சி | மாசசதுர்த்திவிரதம், திலசதுர்த்தி, கந்தசதுர்த்தி |
| 24 | 6 | ஞா | பஞ்39-48 | உத்8-35 | அமி60 | சர்வ முகூர்த்தம் |
| 25 | 7 | திங் | சஷ்33-35 | ரேவ3-38 அஸ்59-53 | சித்60 | சஷ்டி, காதுகுத்த, விதை விதைக்க |
| 26 | 8 | செவ் | சப்28-43 | பர57-28 | சித்60 | ரதசப்தமி, மூலிகை உபயோகிக்க |
| 27 | 9 | புத | அ25-28 | கிரு ✱ 56-33 | அ56-33சி | கிருத்திகை, கடன் நீக்க, சுரங்கம் வெட்ட |
| 28 | 10 | வியா | நவ23-40 | ரோ57-3 | மர60 | |
| 29 | 11 | வெ | தச23-13 | மிரு58-50 | சித்60 | தைமீ ஏகாதசி திதிமார்கழி 29௳, கிரகப்பிரவேசம் யாத்திரைசெய்ய. |

| | | | |
|---|---|---|---|
| | செ | | ராகு |
| குரு | 6௳ மக-புத<br>14 ,, கும்-சுக்<br>24 ,, கும்-புத<br>25 ,, ரிஷ-செ | | |
| சூ சுக் | | | |
| புத கே | சனி | | |

**PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,**
**AT THE " ANANDA BODHINI" POWER PRESS,**
**15, VENKATESA MAISTRY ST., MADRAS.**